525

# ஜகன்மோகினி

ஆசிரியை:
வை. மு. கோதைநாயகி அம்மாள்

24 JUL 1939
MADRAS



## கானல் நீர்

1. தீமைசெய்யா திரு நெஞ்சே!—ஈசன்
நாமத்தை நம்பிநல்பணிசெய்ய அஞ்சேல்—தீமை

2. காசாசைகொண் டுழலாதே—அந்த
ஆசையே வாழ்வைஎரிக்கும் அழலாம்:

3. பக்தியினால் சித்திதேடு—அல்ப
புத்தியினால் வரும் புயல் போன்றக்கேடு—

* * * * *

குடும்ப ஸ்திரீகள் ஸினிமாவில்
நடிக்கலாமா? கூடாதா?

இதற்குப் பதிலை இதனுள்ளிருக்கும்
பக்கங்களில் படியுங்கள்.

ஜூலை 1939

## கபட உலகம்

அணா 2

ஆகப் பொறுத்தது

ஆறப் பொறுக்கலாகாதா?

ஜூலை

# 8

வெகு தூரத்திலில்லையே!

அன்று

# பக்த குமணன்

அல்லது

## ராஜயோகி

●

சென்னை

## வெலிங்டனுக்கு

வருகிறார்

●

குமணன் வரவு அனைவருக்கும் குதூகல
மளிக்குமென்பது திண்ணம்

பக்த குமணன் பாடல்களை யங் இந்தியா ரிகார்டுகளில் கேளுங்கள்

ஸோல் டிஸ்ட்ரிபியூடர்கள்:

## கபூர்சந்த் அண்டு கம்பெனி

பெங்களூர் ஸிட்டி

தந்தி: KAPURCHAND டெலிபோன்: 2382

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JUL 1939




எஸ். டி.
சுப்புலக்ஷ்மி

பேபி
ஸரோஜா

பாபநாசம்
சிவன்

டைரக்ஷன்
K. சுப்ரமண்யம்
BABL

டிஸ்ட்ரிப்யூடர்ஸ்

யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பரேஷன் மதராஸ்

'ஜகன்மோகினி' ஜூலை 1939

வெளிவரும் நன்னாளை எதிர்பாருங்கள்!

**ஸ்ரீரஞ்சனி டாக்கீஸாரின்**

தமிழ் பேசும் மாபெரும் புராணப் படம்



# சக்தி மாயா

சென்னை ஷைனிங் ஸ்டார் கோஷ்டியினர் நடித்தது.

*

ஒளிப்பதிவு:
**கமால்கோஷ்**

டைரக்ஷன்:
**எச். எஸ். மேத்தா**

ஒலிப்பதிவு:
**ஜோதிஷ் ஸின்ஹா**

ஸ்டுடியோ:
**மோஷன் பிக்சர் ப்ரொட்யூஸர்ஸ் கம்பைன் லிமிடெட்**

---

விநியோகிப்பவர்கள்:
**மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பரேஷன்**

7, பெல்ஸ்ரோடு :: திருவல்லிக்கேணி :: சென்னை.

# ஸ்ரீ ரஞ்சித் மூவிடோனின்

## முதல் தமிழ்ப் படம்

தற்காலத்திய மகத்தான சங்கீத விருந்து

சீதாபஹரணம்



ஜூலை 14-ந் தேதி வெளிவரும்

[சீதாபஹரணத்தில் பட்டாபிஷேகக் காட்சி.]

“ஸ்ரீ ராமசந்திரனுக்கு ஜெய மங்களம்
சீதாபிராட்டிக்குச் சுப மங்களம்”
என்று பாடலாமா ?

Sole Distributors :—
SELECT PICTURES CIRCUIT,
Gandhinagar, Bangalore City.



உண்மை பாரத வீரனுக்கு உயிர் பெரிதல்ல
தேசத்தின் கௌரவம்தான் பெரிது

ஏஎல். ஆர்எம். கம்பெனியாரின்

# மாத்ரு பூமி

டைரக்ஷன் :

எச். எம். ரெட்டி

---

விவரங்களுக்கு :

**ஏஎல். ஆர்எம். கம்பெனி,**

**32, ஆதியப்ப முதலி தெரு,**

**வேப்பேரி, :: :: சென்னை.**



பக்ததுபனைனில் மிஸ். டி. பி. ராஜலக்ஷ்மி. (சந்திராவளி)

183034.

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து.

—ஸ்ரீ வீரராகவ கவி.


| மலர் 16 | பிரமாதி ௵ ஆனி ௴<br>ஜூலை 1939 | இதழ் 7 |
| --- | --- | --- |


## திருமால் துதி

பாம்பணைப் பள்ளியுட் பாற்கடற் றுயிலும்
வாம னடியிணை வாழ்த்துவார் நாளும்
இருவினை யொழிய இன்பம்
பெருகுவ ரவன்றன் பெரும்பதிப் புகுந்தே. 1

விடங்கொள் பாம்பின் படமிசை மேவும்
திண்புய வாழி யங்கை நெடுமால்
பொன்னடித் துணையை நாளும்
உன்னுவேற் குண்டோ உறுதுய ரம்மே. 2

அலையெறி பாற்கட லமரு மாயவன்
மலர்புரை மாணடி மாண்புற வாழ்த்தும்
தொண்ட ரடித்துணை தமியன்
மண்டிய சிரமிசை வயங்கிய மலரே. 3

கொவ்வைக் கனிவாய்க் கொடியிடை மயிலின்
சாயற் பணிமொழி மாத ரிவடிறத்
தின்னரு ளென்னே வுரையாய்
பன்னருஞ் சிறப்பிற் பார்மகள் வேந்தே! 4

—திரு. ராகவாசாரியர்.

# கதரில் போட்டி கூடாது

## காந்திஜி விதிக்கும் ஆறு நிபந்தனைகள்

'கதரே, கதரைக் கொன்றுவிடுமா?' என்ற தலைப்பில் மகாத்மா காந்தி, 'ஹரிஜன்' பத்திரிகையில் பின் வருமாறு எழுதியிருக்கிறார்.

"மகாராஷ்டிரா கிளையில், நூற்பவர்களின் சம்பளங்களை உயர்த்திவிட்டார்கள். மற்ற கிளைகளில் அவ்வளவு உயர்த்த வில்லை. ஆகையால் அவர்கள் தங்கள் உற்பத்திகளை குறைந்த விலைக்கு மகாராஷ்டிரா எல்லையில்கூட விற்கிறார்கள். இதனால் மகாராஷ்டிராவில் ஒன்று சம்பளத்தை குறைக்க வேண்டும், அல்லது கிளையை மூடிவிட வேண்டும். கதரின் நோக்கம் பூர்த்தியாக வேண்டுமானால், ஆறு நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

1. நூற்பவர்களுக்கு மணிக்கு ஒரு அணு கிடைக்கும் வரையில் சம்பளம், கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தப்பட வேண்டும்.

2. ஒவ்வொரு மாகாணமும் தனக்கு வேண்டியதற்கு மேல் உற்பத்தி செய்யக்கூடாது. வெளி மாகாணங்களில் விற்பனை செய்ய வேண்டுமானால், அந்த மாகாணத்தில் உற்பத்தி செய்யக் கூடியதை விற்கத்தான் அனுமதி கொடுக்கவேண்டும்.

3. லாபம் சம்பாதிக்க வேண்டுமென்பதற்காக லாபம் வைக்கக்கூடாது.

4. ஒரு மாகாணம் சம்பளத்தை உயர்த்த விரும்பினால், மற்ற மாகாணங்கள் அதை ஆதரிக்க வேண்டும்.

5. மற்ற மாகாண கதரைவிட கிராக்கியாயிருந்தாலும், ஜனங்கள் தங்கள் மாகாணத்து கதரையேதான் உபயோகிக்க வேண்டும்.

6. வெளி உலகத்தோடு போட்டி போடுவது எவ்வளவு கெடுதலோ அவ்வளவு கெடுதல் மாகாணங்களுக்குள் போட்டி போட்டுக்கொள்வது.

அத்தாக்ஷிபெறாத கதர் கடைகளெல்லாம் உடனே மூடப்பட வேண்டியது அவசியம்."

# காங்கிரஸ் தேர்தல் தேதி விவரங்கள்

## காரியக் கமிட்டி அறிக்கை

### கதர் விதி கடுமையாக அனுஷ்டிக்கப்படும்

காங்கிரஸ் காரியக் கமிட்டி அடுத்த காங்கிரஸ் செஷன் சம்பந்தமாக கீழ்க் காணும் தேதிகளை நிர்ணயித்திருக்கிறது. அடுத்த காங்கிரஸ் செஷன் (மகாசபைக்கூட்டம்) டிஸம்பர் மாதக் கடைசி வாரத்தில் நடைபெறும்.

(1) காங்கிரஸ் மெம்பர்களை பதிவு செய்யும் கடைசி தேதி: செப்டம்பர் 15. (2) டெலிகேட்டுகள்தேர்தல்: நவம்பர் 8. (3) ராஷ்ட்ரபதிப் பதவிக்கு அபேக்ஷை மனுக்களை தாக்கல் செய்ய கடைசி தேதி: நவம்பர் 15. (4) ராஷ்ட்ரபதி, அ. இ. காங்கிரஸ் கமிட்டி மெம்பர்கள் தேர்ந்தெடுக்க டெலிகேட்டுகளின் கூட்டம் நடக்கவேண்டிய தேதி: நவம்பர் 29. (5) ராஷ்ட்ரபதி தேர்தல் முடிவு அறிவிக்கப்படும் தேதி: டிஸம்பர் 3.

கதர் விதி சரியாக அனுஷ்டிக்கப்படவில்லை யென்று அ. இ. காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்திற்கு கணக்குவழக்கின்றிப் புகார்கள் வந்திருப்பதால், இந்த விதியை கடுமையாக அனுஷ்டிக்குமாறு எல்லா காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் உத்தரவு அனுப்புவதென காங்கிரஸ் காரியக் கமிட்டி முடிவு செய்திருக்கிறது. எந்த காங்கிரஸ் கமிட்டிக்கும் அபேக்ஷகராக நிற்க விரும்புகிறவர்கள், 6 மாதமாகவாவது வழக்கமாக கதர் உடுத்தி வந்திருக்க வேண்டும் என்று இந்த விதி கூறுகிறது.

## புகையிலை வரி சட்டம்

### ஆகஸ்டு முதல் தேதி அமுலுக்கு வருகிறது.

#### வியாபாரிகள் கவனிக்க

சென்னை சர்க்காரின் விளம்பர இலாகா கீழ்க்காணும் அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

சென்னை புகையிலை சட்டம் 1939-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 1-ந் தேதி முதல் அமுலுக்கு வரும். எந்த ரூபத்திலாவது உள்ள புகையிலையை ஆகஸ்ட் மாதம் 1-ந் தேதி முதல் மொத்தமாக விற்க விரும்புகிறவர் அல்லது மொத்தமாக வாங்கி விற்கிறவர், அல்லது கமிஷன் ஏஜண்டாயுள்ளவர் தங்கள் விருப்பத்தை உடனே சர்க்காருக்குத் தெரிவித்து விடவேண்டும். இதற்கென ஒரு தனி பாரம் இருக்கிறது. இந்த பாரத்தை மனுதார்களே கையால் எழுதி தயாரித்து, அந்த 'தாலூகா தாசில்தார் மேல்பார்த்து, உதவி வர்த்தக வரி அதிகாரிக்கு கொடுக்கவும்' என்ற விலாசத்துக்கு அனுப்பலாம். மனுதார் தான் தொழில் நடத்தும் தாலுகாவிலுள்ள உதவி வர்த்தக அதிகாரிக்கே மனுவை அனுப்பவேண்டும். மேற்கண்ட தகவலை தெரிவிக்கிறவர்களுக்கெல்லாம் வர்த்தக வரி இலாகா, மனுபாரங்களை அனுப்பும். அதை அவர்கள் பூர்த்தி செய்து லைசென்சுக்காக ஏதாவது தொகை நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அத்துடன் மனுபாரத்தை பெற்ற 15 தினங்களுக்குள் திருப்பி அனுப்பவேண்டும். சர்க்காருக்கு அறிவிக்க வேண்டிய பாரத்திற்கோ அல்லது மனுபாரத்திற்கோ ஸ்டாம்பு அனுப்ப வேண்டியதில்லை. மேலே கூறப்பட்டபடி நடந்துகொள்ளாமல், சட்டம் சொல்லுகிறபடி லைசென்சைப் பெறுமல் ஆகஸ்ட் மாதம் 1-ந் தேதிக்குப் பின் புகையிலை வியாபாரம் செய்கிறவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள் என்று பொதுஜனங்கள் எச்சரிக்கப்படுகிறுர்கள்."

## வந்தேமாதர கீதம்

### பம்பாய் சர்க்கார் சுற்றறிக்கை

அபிப்பிராய பேதங்களிருந்தால் பள்ளிக்கூடங்களில் 'வந்தேமாதர கீதம்' பாடவேண்டுமென்று வற்புறுத்த வேண்டாமென, பம்பாய் சர்க்கார், ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். மாணவர்கள் ஏகமனதாக அந்த கீதம் வேண்டுமென்று கேட்டால், ஆக்ஷேபிக்கக் கூடாதென்றும் சுற்றறிக்கை கூறுகிறது.

## ஹரிஜன் அபேட்சகருக்கு சலுகை

### சர்க்காரின் புது உத்தரவு

விளம்பர மந்திரி பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்:—சென்னை, ஆந்திரா, அண்ணாமலை சர்வகலாசாலைகளின் இன்டர்மீடியட் பரீட்சையில் தேறியவரோ, அச் சர்வகலாசாலைகளின் பட்டதாரிகளோவான ஹரிஜன அபேக்ஷகர் 1939 ஜனவரி 1வயிலிருந்து 3 வருஷம்வரையில் சர்க்கார் உத்தியோகத்திற்கு மனுபோட கட்டணம் செலுத்த வேண்டியதில்லையென்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்தது. மேலே சொன்ன மூன்று சர்வகலாசாலைகள் அல்லாத வேறு சர்வகலாசாலைகளிலும் இன்டர்மீடியட் பரீட்சை தேறியவர்களோ, பட்டம் பெற்றவர்களோவான ஹரிஜன் அபேடசகர்களுக்கு 3 வருஷகாலத்திற்கு மனு கட்டணம் செலுத்துவது சம்பந்தமாக விலக்கு அனுமதிக்க சர்க்கார் தீர்மானித்து விட்டது.

## காங்கிரஸ் ஆட்சியில் சட்டமறுப்பு நியாயமல்ல

காங்கிரஸ் மந்திரி சபைகள் சர்க்கார் நிர்வாகத்தை மேற்கொண்ட பிறகு சட்டமறுப்பு செய்வது அனாவசியமாகும். மந்திரிகள் தங்கள் தொகுதிகளுடன் அடிக்கடி சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பொதுஜன தேவைகளை பூர்த்தி செய்யத் தயாராக விருக்கிறார்கள். இவ்வித சந்தர்ப்பங்களில் ஜனங்கள் தங்கள் தொகுதி மெம்பர்கள் மூலமோ, மந்திரிகள் மூலமோ தங்களுடைய சட்டரீதியான குறைகளுக்குப் பரிகாரம் தேடுவது சாத்யமே. அசெம்பிளி மெம்பர்கள், மந்திரிகள் இவர்கள் மூலம் எதுவும் சாதிக்க முடியவில்லையானால், ஸ்தல காங்கிரஸ் ஸ்தாபனங்கள், விஷயத்தை மாகாண கமிட்டிக்கோ, அல்லது பார்லிமெண்டரி சப்-கமிட்டிக்கோ, முடிவாக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கோ தெரிவிக்கலாம். இத்தனை வழிகளிருக்கையில், எந்த சந்தர்ப்பத்திலும் சட்ட மறுப்பு செய்ய நியாயமே இல்லை. உமரீர் சத்தியாக்கிரக அநுபவத்திற்குப் பிறகு ஜனங்கள் சுயநலக்காரரின் பிரசாரத்தால் ஏமாறமாட்டார்களென்று நான் நம்புகிறேன்.

—ம. மா. மந்திரி மிஸ்ரா.

## முஸ்லீம்களுக்கு வேண்டுகோள்

முஸ்லீம்கள் தனி முயற்சியால் இந்தியாவில் ஒரு தனி முஸ்லீம் ராஜ்யத்தை ஸ்தாபிப்பது சாத்தியமானால் நான் உடனே பாக்கிஸ்தான் இயக்கத்தில் சேர்ந்துவிடுவேன். தனி முஸ்லீம் இந்தியாவை ஏற்படுத்துவது அசாத்யமாகும்; அனுபவ சாத்யமான காரியமுமல்ல. ஆகவே நீங்கள் அனே

வரும் தேசவிடுதலைப் போராட்டத்திற்காக காங்கிரஸில் திரளாகச் சேருங்கள். இதுவே உங்களுக்கு எனது யோசனை. ஷியா-ஸுன்னி தகராறில் கலந்து கொள்ள வேண்டாமென்று நான் முஸ்லீம்களை வேண்டுகிறேன். இந்திய மக்களின் எல்லா பிரிவினர்களிடையும் ஒற்றுமை ஏற்பட உங்களுடைய சக்திகளை உபயோகிக்கும்படியும் நான் வேண்டுகிறேன்.

—மௌலானா அஹமத் சையீத்.

முஸ்லீம்கள் ஹிந்துக்களுடன் சேர்ந்து வேலை செய்தால்தான் தேசம் விடுதலையடையுமென்று துருக்கியரும் காபூல் மன்னர்களும் என்னிடம் யோசனை கூறினார்கள். எனது அநுபவமும் அதுவே.

—மௌலானா உபயதுல்லா ஸிந்தி.

## மைசூர் காங்கிரஸ்காரர்களுக்கு புத்திமதி

பூர்ண பொறுப்பாட்சி கொடுக்க வேண்டுமென்று மீண்டும் கடைசி முறையாக சமஸ்தான அதிகாரிகளை அணுகிப் பாருங்கள். அதனால் ஒன்றும் பிரயோசனமேற்படாதென்று உங்களுக்குத் தோன்றினாலும் பரவாயில்லை. சீர்திருத்தம் அதிருப்திகரமாயிருக்கிறதென்று உங்களுக்குத் தோன்றினால் அதை நிராகரிக்க வேண்டியதே. இந்திய சமஸ்தானாதிபதிகள் ஜனங்களுக்கு உண்மையான அதிகாரங்கள் எதையும் கொடுக்க இப்போது தயாராயில்லை.

கடுமையான போராட்டம் ஆரம்பித்து, மகத்தான தியாகங்கள் செய்யாமல் சமஸ்தானப் பிரஜைகள் எதுவும் பெற்றுவிட முடியுமென்று எனக்குத் தெரியவில்லை மைசூர் பிரஜைகள் அத்தகைய போராட்டத்திற்கு தயாராய் இருப்பதாக நீங்கள் கருதினால், பிற்போக்கான ஒரு சீர்திருத்தத்தை உங்கள்மீது சுமத்துவதற்கு முயற்சித்தால், என்ன வந்தாலும் வரட்டும் என்று அதை நீங்கள் எதிர்க்கவேண்டியதுதான் ஆனால், அதற்கு நீங்களேதான் முழுப் பொறுப்பு ஏற்றுக் கொள்ளவேண்டும். —படேல்.

சமஸ்தானப் பிரஜைகளின் கோரிக்கையான பூர்ண பொறுப்பாட்சியை தளர்த்துவது விரும்பத்தக்கதல்ல. சர்க்கார் அளிக்கும் சீர்திருத்தம் அதிருப்திகரமாயிருந்து, அதை பிரஜைகள் ஒப்புக்கொள்ள முடியவில்லை யென்றால், உடனே சர்வஜன சட்டமறுப்பு ஆரம்பித்துவிடவேண்டுமென்று அர்த்தமில்லை ஆனால், சட்ட பூர்வமான முறைகளில் தங்கள் லக்ஷியத்திற்கு கிளர்ச்சி செய்துகொண்டிருக்கலாம். அந்த சமயத்தில் யாராவது தலைவர்கள் கைது செய்யப்பட்டால் அதை வரவேற்கவேண்டும். ஏனெனில் அந்தக் கிளர்ச்சி சரியான முறையில் நடத்தப்பட்டால், சர்வஜன சட்டமறுப்புக்கு அது தயார் செய்வதாயிருக்கும், சர்வஜன சட்டமறுப்பு என்பது முற்றிலும் சமஸ்தான மக்களின் பலத்தைத்தான் பொறுத்தது. இந்தியாவிலும் வெளி நாட்டிலும் உள்ள நிலைமையை கவனித்து அதற்குத் தகுந்தாற்போல் நடந்து கொள்ளவேண்டும்.

பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களிலுள்ள மாகாண சுதந்தர திட்டத்தைப் போன்ற சீர்திருத்தம் அளிக்கப்பட்டால் அதை ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால், பூர்ண பொறுப்பாட்சி லட்சியத்தை மறந்துவிடக் கூடாது. எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று முடிவுசெய்யும் பொறுப்பு முற்றிலும் மைசூர் காங்கிரஸ்காரர்களைத்தான் சேர்ந்தது.

—ஜவஹர்லால்.

"பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களிலிருப்பது போன்ற சீர்திருத்த மளிக்கப்பட்டால், மைசூர்காரர்களும், மற்ற சமஸ்தானங்களிலுள்ளவர்

களும், அதை எற்றுக்கொள்ள வேண்டுமென்று ஸ்ரீ நேரு சொன்னதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். இந்திய சமஸ்தானங்களில் இன்றைய நிலைமையில், எதாவது மாறுதல்கள் செய்தாலும் ஒப்புக்கொள்ளலாம். ஆகவே, மைசூர் காங்கிரஸ்காரர்கள், அதிகாரிகளிடம் குறிப்பாக இந்த கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இந்த லக்ஷியத்தை உடனே பெறுவதற்கு சட்ட பூர்வமான கிளர்ச்சி நடத்த வேண்டுமென்பதையும் ஒப்புக்கொள்ளுகிறேன். மகாத்மா காந்தி கொடுத்திருக்கும் யோசனையை நன்றாக சீர்தூக்கிப் பார்த்து, பிறகுதான் அடுத்தபடி என்ன செய்வதென்று தீர்மானிக்கவேண்டும்.''

—சத்தியமூர்த்தி.



சீதாபஹரணத்தில் ஒரு காட்சி

# நீதி சந்திரிகை

பெற்றோரைப் பேணல் : பிறர்க்குதவி செய்துவத்தல் :
அற்றோர்க்கு அளித்தல் அரும்பொருளைச்—சுற்றம்
தழுவல் : உடற்பிறப்பைச் சார்ந்தொழுகல் : யாவும்
வழுவாத இல்லறத்தின் வாழ்வு. ௭

கல்வி பயிறல் : களங்கமறக் கற்றபடி
நல்வழியில் நிற்க நனிவிரும்பல் :—செல்வப்
பொருளை அறத்தின் வழியீட்டல் : போற்றல்
தெருளுடையார் செய்யும் செயல். ௮

காலம் அறியாது கண்துயிலல் : தற்குரிய
சீலமுதல் யாவையுமே தேடாமை : —ஞாலம்
நயக்குமா செய்யாமை : நாளைக் கழித்தல்
துயக்குற்றான் எய்துந் தொழில். ௯

ஒற்றுமையின் மிக்க உரனில்லை : மக்கட்குக்
கற்றுணர்வின் மிக்க கதியில்லை : —முற்றும்
அறத்திற் சிறந்த அரணில்லை : இல்லை
மறத்திற் கெடுக்கும் மதி. ௰

ஊழ்வினையின் மிக்க வலியில்லை : ஒண்டொடியார்
பாழ்வலையின் மிக்க படுநரகில் : —ஆழியினான்
பொற்கழலின் மிக்க பொருளில்லை : இல்லையே
நற்கலையின் மிக்க நலம். ௧௧

நல்லோர்ப் பழித்தல் : நடுவின்றித் தீமைபுகும்
புல்லோரைப் போற்றல் புகழ்நீங்கிப்—பல்லோர்
பகைகோடல் : நாளும் பயனற்ற செய்தல் :
மிகையாம்இவை ஒழித்தல் வேண்டு. ௧௨

சாதிநிலை தவறின் சாற்றும்அறம் யாவும்போம் :
மேதினியில் தீமை மிகுந்திடுமால் : —நீதி
ஒருங்கொழியும் : பொய்ம்முதல ஓங்கும் : துயரம்
நெருங்கும் மனத்தெஞ்ஞான்றும் நேர்ந்து. ௧௩

—திரு. ராகவாசாரியர்.

# தேச சேவைக்கு நிரந்தர தொண்டர் படை

## தியாகமே முக்கிய யோக்கியதாம்சம்

'நிரந்தரமான தொண்டர் படை யொன்றிருந்தால் மகாநாடு, காங்கிரஸ் மஹாசபைக் கூட்டம், திருவிழா போன்ற சமயங்களில் சேவை புரியக்கூடுவதோடு அப்படை தேச சேவைக்கும் பிர யோஜனகரமானதாக விருக்கும். ஒரு சத்தியாக்கிரக காலத்தில் சேர்க்கப்படும் தொண்டர்கள் பயிற்சி இல்லாதவர்களாகையால் அவர்கள் சத்தியாக்கிரகத்தை பூர்ணமாக உணர்ந்து நடக்கமுடிய வில்லை. நிரந்தரமான தொண்டர் படை அமைப்பது போராட்டத் திற்காக அல்ல. தேசிய புனருத்தாரண வேலைக்காகவே. உடையும் ஊது குழாயும் தொண்டர் படையின் முக்கிய அம்சமல்ல. சந்தர்ப் பம் ஏற்பட்டபோது தியாகம் புரிய நம் தொண்டர்கள் தயாராய் இருக்கவேண்டும். அவர்கள்தமக்குமேலுள்ளவர்களின்உத்தரவுக்கு கீழ்ப்படியவேண்டும். கீழ்ப்படியத் தெரியாதவர் தலைவராக முடி யாது. தற்போதுள்ள மாணவர்களுக்கு கட்டுப்பாடுஇல்லை. கடந்த தலைமுறை மாணவர்களின் தியாகங்களாலேயே தேசம் முன் னேற்ற மடைந்துள்ளது. இக்கால மாணவர்கள் கூச்சல் போடு கிறார்கள் ; பிரசங்கிகளையும், ப்ரபசர்களையும் அவமதிக்கிறார்கள். இவ்வித கோளாறு தற்காலிகமானதென்று நான் கருதுகிறேன். மாணவர்கள் தொண்டர் படையில் சேர்ந்தால் அவர்கள் வாழ்க் கைப் போராட்டத்தை நிர்வகிக்க தயாராகவிருக்கவேண்டும்.'

## இடது சாரிக்கு எச்சரிக்கை

"எனக்குப் பார்லிமெண்டரி மனப்பான்மை கிடையாது. கிஸான்களை எப்படி கட்டுப்பாடாக சேர்ப்பதென்பது எனக்குத் தெரியும்; என்னுடைய வேலையே அதுதான்.

மந்திரிசபைகளின் கொள்கைகள் உங்களுக்குப் பிடிக்காவிட் டால், நாங்கள் உடனே விலகிக்கொள்ளத் தயாரா யிருக் கிறோம். கிஸான்களோ, இடதுசாரிகளோ, யார் வேண்டு மானாலும் அதை ஏற்றுக் கொள்ளட்டும். காங்கிரஸ் மந்திரி சபை கள் பரீக்ஷார்த்தமான ஒரு காரியம்தான். இந்த பரிக்ஷை வெற்றி பெறுவதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். கட்டுப்பாடும், ஆதரவும் இருந்தால் மந்திரிகள் ஏதாவது நல்லது செய்ய முடியும். மந்திரி சபை பிடிக்கவில்லை யென்று சொல்பவர்கள், பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளட்டும். நீங்கள் காட்டக்கூடிய உதா ரணத்தைப் பின்பற்றி நாங்கள் சத்யாக்ரஹம் செய்கிறோம். அப் போது எப்படி யிருக்கிறதென்று பாருங்கள். —ஸர்தார் படேல்.

## சங்க சமூக சீர்திருத்த கமிட்டிக்கு இந்திய ஸ்திரீ நியமனம்

சமூக சீர்திருத்தப் பிரச்னைகளில் சங்கத்திற்கு யோசனை கூறும் ஆலோசனைக் கமிட்டிக்கு, ஸ்ரீமதி. கிரான் போஸை நியமித்திருக்கிறார்கள். அவர்தான் இந்தப் பதவியை வகிக்கும் முதல் இந்திய ஸ்திரீ.

# மகாத்மாவின் மணிவாக்கு

## புதிய கொள்கையின் விளக்கம்

சமஸ்தானங்களைப் பற்றி நான் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கைகள் பலருக்கு பிரமிப்பையும், கவலையையும் உண்டுபண்ணியிருப்பதுபற்றி நான் வருந்துகிறேன்; நான் எழுதும் கட்டுரைகளையும், நான் சொல்வதையும், என் செய்கைகளையும் இதுவரை சிரமமின்றி சரியாகத் தெரிந்துகொள்ள முடிந்தவர்கள் கூட இப்போது என் அறிக்கைகளைப் பற்றி பிரமிப்பு அடைகிறார்கள்.

ராஜ்கோட் சம்பந்தமாக நான் வெளியிட்ட அறிக்கைகளும், நான் செய்த காரியங்களும், திருவிதாங்கூர் சம்பந்தமாக நான் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையும், பிரமிப்பை மனக்குழப்பமாக முற்ற வைத்துவிட்டன. ஸ்ரீ. பியாரிலாலும், பிறகு ஸ்ரீ. மஹாதேவ தேசாயும் மிகவும் துணிவாக என்னுடைய செயல்களின் கருத்தை "ஹரிஜன்" பத்திரிகைமூலம் வியாக்கியானம் செய்ய முயற்சித்து வருகிறார்கள். தப்பபிப்பிராயங்களை மாற்றுவதில் அவர்கள் மிகவும் உதவி யிருக்கிறார்கள். ஆனால், நேரில் நானே ஏதாவது சொல்லவேண்டுமென்றும், நான் என் செயல்களின் கருத்தை விளக்கவேண்டு மென்றும் கோரப்படுவதாக தெரிகிறது. ஆகையால், என் எழுத்துக்கள், செய்கைகள் இவற்றின் உட்கருத்து என்னவென்பதை விளக்க நான் முயற்சிக்க வேண்டும்.

### அர்த்தமென்ன?

முதல் முதலாக என் அறிக்கைகள், செய்கைகள் இவற்றின் கருத்து எதுவல்ல என்பதை தெளிவுபடுத்துகிறேன். உதாரணமாக, சட்ட மறுப்பைப்பற்றி தனி நபர் சட்டமறுப்பு, பொதுஜன சட்டமறுப்பு இரண்டையும் பற்றி-எனது அபிப்பிராயம் மாறிவிடவில்லை யென்பதைச் சொல்லிவிடுகிறேன். காங்கிரஸுக்கும் சமஸ்தானங்களுக்கும், சமஸ்தான மக்களுக்குமிடையேயுள்ள உறவு பற்றியும் என் அபிப்பிராயம் மாறவில்லை. ஆதிபத்ய சர்க்கார், சமஸ்தான மக்களின்பால் சில கடமைகளை நிறைவேற்ற வேண்டும்; அவ்வாறு அது தன் கடமைகளை செய்வது மிகவும் அவசியம்; ஆதிபத்ய சர்க்கார் சமஸ்தானப் பிரஜைகளின்பால் தன் கடமையை பல வருஷங்களாக அலக்ஷியம் செய்திருக்கிறது என்ற விஷயத்திலும் என் அபிப்பிராயம் மாறவில்லை.

### வாபஸ் பெற்றது எதை?

நான் வாபஸ் வாங்கினது, அல்லது பின் வாங்கியது, அல்லது மாற்றிக்கொண்டது என்பது ஒரே ஒரு தவறைப்பற்றித்தான். அதாவது கடவுளின்பால் நான் நம்பிக்கை யிழந்தவன் போல நடந்துகொண்டேன். அதை மட்டும் தான் தவறென்று கருதி திருத்திக்கொண்டேன். கடவுளின் பெயரால் உண்ணாவிரதம்

மேற்கொண்ட பிறகு நான் கடவுளுக்கு உண்மைத் துணையாக வைசிராயின் தலையீட்டைத்தேடினேனே, அதைத்தான் தவறு என்று கூறினேன். கடவுளுக்குப் பதிலாக, அல்லது கடவுளின் பலம் போதாதென்று அதிக பலத்துக்காக வைசிராயின் பலத்தின் மீது நம்பிக்கை வைத்து அதை தாகூர் சாஹிப்மீது பிரயோகித்தது பலாத்காரச் செயலே. உண்ணாவிரதத்தில் இந்த அம்சம் சிறிதும் இருந்திருக்கக் கூடாது.

என் வாழ்க்கையில், ராஜ்கோட் அத்தியாயத்தின் உட்கருத்தும், படிப்பினையும் யாதெனில், 1920-ம் வருஷத்துக்குப் பிறகு நமது இயக்கம் மிகவும் ஆச்சரியகரமான அளவு அஹிம்சைத் தன்மையுள்ளதாகவே இருந்தது என்ருலும், அது கலப்பற்ற அஹிம்சையல்ல என்று நான் ராஜ்கோட் அத்தியாயத்தில் கண்டு பிடித்தேன்.

### அஹிம்ஸை பூரணமாக இல்லை

1920-ம் வருஷத்திலிருந்து இதுவரை நடந்த இயக்கத்தால் மிகுந்த பயன் ஏற்பட்டிருப்பது உண்மையே யாயினும், அஹிம்சையானது பூர்ணமானதாக இருந்திருந்தால் நமது வெற்றி இன்னும் மிகப் பெரிதாகவும் சிறப்புடையதாகவும் இருந்திருக்கும். அஹிம்சா முறையில் செய்யப்படும் காரியம், மனதிலும், வாக்கிலும் அஹிம்சையுடன் பொருந்தியதாக இருக்குமாயின், எதிரியிடம் பலாத்கார உணர்ச்சியை தூண்டியிருக்காது. ஆனல், சமஸ்தானத்தில் நடந்த இயக்கங்களோ, சமஸ்தானுதிபதிகள் மனதிலும் அவர்களது மந்திரிகள் மனதிலும் பலாத்கார வேகத்தையே தூண்டியது. அவர்கள் காங்கிரஸின்பால் முழுதும் அவநம்பிக்கையே கொண்டிருக்கிருர்கள். அவர்களது மனது அவநம்பிக்கையால் நிரப்பப்பட்டிருக்கிறது. அந்த காங்கிரஸ் தலையிடக் கூடாது என்று அவர்கள் வற்புறுத்துகிருர்கள். "காங்கிரஸ்" என்ற பெயரைக் கேட்டாலே அவர்களுக்கு கோபமும் எரிச்சலும் வருகிறது. நமது அஹிம்சையானது பூர்ணமாக இருந்தால் இவ்வாறு ஏற்பட்டிருக்காது.

### புது ஒளியின் அர்த்தம்

நமது அஹிம்சை குறைவுள்ளது என்று நான் கண்ட பிறகு என் மனப்பான்மையில் மாறுதல் ஏற்பட்டது. இப்போது நான் சத்யாக்ரஹிகளுக்கு கடுமையான யோக்கியதாம்சங்களை வற்புறுத்துகிறேன். இவ்வாறு நிபந்தனைகளை நான் கடுமைப்படுத்துவதன் பயனுக, சத்யாக்ரஹிகளின் தொகை மிக மிகக் குறைந்து போகலாம். போனல் அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. சத்யாக்ரஹம் என்பது எல்லா அளவிலும் பொருந்தக்கூடிய ஒரு தத்துவமாக இருக்குமாயின், சத்யாக்ரஹிகளின் தொகை மிக சொற்பமாயிருந்தாலும் அது திறமையாக பயன்படுமாறு ஒரு வழியை நான் கண்டுபிடிக்க வேண்டும். இந்த "புதிய வெளிச்சத்தை" நான்

இன்னும் தெளிவாக காணவில்லை என்று நான் சொல்வதன் அர்த்தம் என்ன? மிக சொற்பமான தொகையினர் மூலம் இந்த சத்யாக்ரஹத்தை வெற்றிதரும் ஆயுதமாக்குவதற்கு என்ன வழியென்பதை நான் இன்னும் நிச்சயமாகக் கண்டாகவில்லை யென்பதே நான் சொல்வதின் அர்த்தம்.

### சமயம் சரியல்ல

"என் வாழ்க்கையில் எப்பொழுதுமே நான் முதல் அடி எடுத்துவைத்த பிறகுதான் அடுத்த அடி புலப்படுவது வழக்கமாக இருக்கிறது. அதுபோலவே இப்போதும் முதல்அடி எடுத்துவைத்த பிறகு அடுத்த அடி என் கண்ணுக்கு புலப்படுவதாகயிருக்கலாம்.

"சமயம் பக்குவமாகும்போது என்ன செய்வதென்ற திட்டமும் தயாராக வந்துவிடும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது" காரியத்தில் பிரவேசிக்கும் காலம் எப்போதும் இருக்கத்தான் செய்கிறது, நீதான் தயாராக இல்லை; என்று சிலர் பொறுமையற்று என்னை குறை கூறலாம். அந்தக் குற்றச் சாட்டை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் உண்மை அதற்கு நேர் மாறானது என்பது எனக்குத் தெரியும். சத்யாக்ரஹத்தை மீண்டும் ஆரம்பிக்கத்தக்க நிலைமை வரவில்லையென்று நான் சில வருஷங்களாக சொல்லிவருகிறேன்.

### அதற்குக் காரணங்கள்

அதற்குள்ள காரணங்கள் முற்றிலும் வெளிப்படையாகத் தெரியக்கூடியவைதான். காங்கிரஸானது இப்போது திறமையாக பயன்தரத்தக்க முறையில் தேசம் முழுதிலும் சத்யாக்ரஹத்தை நடத்தக்கூடிய ஸ்தாபனமாக இல்லை. அது மிகவும் கட்டுக்கடங்காமல் பெருகியிருக்கிறது; அதனுள்ளே ஊழல் இருக்கிறது. காங்கிரஸ்காரர்களுக்கிடையே கட்டுப்பாடு இல்லை; போட்டிக்கோஷ்டிகள் கிளம்பியிருக்கின்றன; இந்தப் போட்டிக் கோஷ்டிகள் மெஜாரிட்டி பெற்று ஆதிக்கத்துக்கு வந்தால் காங்கிரஸின் வேலைத் திட்டத்தை அடிப்படைகளிலேயே மாற்றிவிடக்கூடும். இதுவரையில் அவ்வாறு காங்கிரஸின் அடிப்படைகளையே மாற்றக்கூடியவர்கள் மெஜாரிட்டியாக வந்துவிடவில்லையே என்பதுபற்றி நான் ஆறுதலடைய முடியாது. மெஜாரிட்டியாக இருப்பவர்களுக்கு தமது வேலைத் திட்டத்திலே ஜீவசக்தியுள்ள நம்பிக்கை இல்லை. எப்படியாயினும் சரி, மெஜாரிட்டியை மட்டும் கொண்டு சத்தியாக்ரகம் நடத்துவதென்பது சாத்தியமான காரியமல்ல. காங்கிரஸின் பலம் முழுதும் (மெஜாரிட்டி மட்டுமல்ல) சத்யாக்கிரஹத்துக்குப் பின்பலமாக இருக்க வேண்டும்.

அடுத்தபடியாக, வகுப்பு வேற்றுமை. இந்தியா தேசத்திலுள்ள எல்லா வகுப்பினருக்கு மிடையே கண்ணியமான சமாதானமிருந்தாலொழிய, முடிவான இறுதியான சத்யாக்ரஹப் போராட்டம் மனதினால் நினைக்க முடியாததாகும்.

### கவர்னர்களின் கண்ணியம்

கடைசியாக, மாகாண சுயாட்சி சம்பந்தமான பிரச்னைகள். மாகாண சுயாட்சி சம்பந்தமாக நாம் என்ன செய்வதாக நிர்ண யித்துக் கொண்டோமோ அதை, நாம் நிறைவேற்றினதாகச் சொல் லும்படி எதுவும் செய்தாகவில்லை என்பதே என் அபிப்ராயம். இப் போதும் அதுவே என் அபிப்ராயம். கவர்னர்கள் தமது பகுதியை சரியாகவே செய்திருக்கிறார்கள். அவர்களிடம் என்ன எதிர் பார்க்கப் பட்டதோ அதில் அவர்கள் தவறிவிடவில்லை. மந்திரி களின் செய்கைகளில் அவர்கள் தலையிடவில்லை யென்றே சொல் லலாம். ஆனால், தலையீடெல்லாம், அதுவும்—சில சமயங்களில் மிக எரிச்சல் உண்டுபண்ணக்கூடிய முறையில்கூட—காங்கிரஸ்காரரிட மிருந்தும், காங்கிரஸ் ஸ்தாபனங்களிடமிருந்தும்தான் வந்தன.

காங்கிரஸ்காரர்கள் பதவியிலிருக்கும்போது, பொது ஜனங் களிடம் பலாத்காரமே கிளம்பியிருக்கக்கூடாது. மந்திரிகளின் சக்தியில் பெரும் பகுதி, காங்கிரஸ்காரர்களின் கோரிக்கைகளை பூர்த்தி செய்வதிலும், சில காங்கிரஸ்காரர்கள் எதிர்ப்பை சமாளிப்ப திலுமே விரயமாக வேண்டியிருகிறது. இந்த மந்திரிகளை நமக்கு பிடிக்க வில்லையாயின், பொது ஆதரவு அவர்களுக்கு இல்லையாயின், அவர்களை டிஸ்மிஸ் செய்யமுடியும்; டிஸ்மிஸ் செய்துவிடவேண் டும். அவ்வாறு நாம் செய்வதில்லை; பல காங்கிரஸ்காரரின் ஒத் துழைப்பு இல்லாமலே அவர்களை பதவியிலிருக்கும்படி விடுகிறோம்.

மற்றெல்லா முறைகளையும் உபயோகித்துப் பார்க்காமல், கடைசியான தீவிர முறையை ஆரம்பிப்பது சத்யாக்ரஹத்துக்கே விரோதம். அவ்வாறு அவசரப்படுவதை பலாத்காரம் என்றே சொல்லலாம்.

### சீக்கிரம் ஏதாவது செய்தாகவேண்டும்

ஆனால், என்னை ஒன்று கேட்கலாம்: நான் பிரஸ்தாபிக்கும் எல்லா நிபந்தனைகளும் பூர்த்தியான பிறகுதான் எதுவும் செய்யலா மென்று வற்புறுத்தினால், சட்டமறுப்பு கிட்டத்தட்ட அசாத்திய மாய்விடும் என்று ஆட்சேபிக்கலாம். அது நியாயமான ஆக்ஷே பமா? எந்த காரியம் செய்வதாயினும், அதற்கு சில நிபந்தனைகள் பூர்த்தியாக வேண்டும். சத்யாக்ரஹமும் அப்படித்தான். சகிக்க முடியாத ஒரு நிலைமையை ஒழிப்பதற்கு சத்யாக்ரஹத்தைப் பிர யோகிக்கும் ஒருவழி இருக்கத்தான் செய்யும் என்று என் ஹிரு தயத்தில் ஒருஉணர்ச்சியும் நம்பிக்கையும் இருக்கிறது. அந்த "வழி" சட்ட மறுப்பாகத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை.

இப்போது இந்தியாவானது சகிக்க முடியாத ஒரு நிலைமை யையே எதிர்நோக்கி யிருக்கிறது இதை சமாளிப்பதற்கு அஹிம்சா முறையிலோ, அல்லது அராஜகமும் பலாத்காரமுமுள்ள முறை யிலோ ஏதாவது காரியம் செய்துதான் தீரவேண்டும். அதுவும் சீக் கிரமாக அதாவது மதிப்பிட்டு நிர்ணயிக்கத் தக்க ஒருகாலத்துக்குள்

நடக்கவேண்டும். இதைப்பற்றி பின்னொரு சந்தர்ப்பத்தில் ஆராய்கிறேன்.

## சுதந்தரம் என்றால் என்ன ?

"இப்போதெல்லாம் மகாத்மா காந்தி அரசியல் பிரச்னைகளைப் பற்றி பத்திரிகைக்காரர்களுடன் அநேகமாக விவாதிப்பதே இல்லை. ஆனால் 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையைச் சேர்ந்த ஸ்ரீ ஸ்டீல் அதிர்ஷ்டக்காரர். அவர் சமீபத்தில் ராஜகோட்டில் காந்திஜியை பிடித்துக் கொண்டார். சுதந்தரம், ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை, பெடரேஷன் முதலியவைகளைப்பற்றி காந்திஜியுடன் பேசினார். "சுதந்தரம் என்பதற்கு உங்களுடைய வியாக்யானம் என்ன ?" என்று அவர் கேட்டார்.

### காந்திஜி பதில்

அக்கேள்விக்கு மகாத்மா காந்தி பின்வருவாறு பதிலளித்தார்:-

"சுதந்தரம் என்றால், இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் அதிகாரம் அடியோடு போய்விட வேண்டுமென்பதுதான் என் கருத்து. ஆனால் சம அந்தஸ்துடன் இரண்டு நாடுகளும் கூட்டாளிகளைப் போல் இருந்து வரலாம். இந்த சேர்க்கை வேண்டியதில்லை யென்றால் இஷ்டப்பட்டபோது விலகிவிட இருவருக்கும் உரிமை இருக்க வேண்டும். டொமினியன் அந்தஸ்துக்கும் இதற்கும் வித்தியாசம் இருக்க வேண்டுமென்பது கூட இல்லை. ஆனால் இந்தியா ஒரு பெரிய தேசம். தென்னாப்ரிக்கா, கானடா ஆஸ்டிரேலியா போன்ற டொமினியன்களுக்கும், இதற்கும் எவ்வளவோ வித்தியாச மிருக்கிறது. ஆகையால், இந்தியாவுக்கு, டொமினியன் அந்தஸ்து என்ற வார்த்தை அவ்வளவு பொருத்தமானதாயில்லாமலிருக்கலாம். இருந்தாலும், யிரிட்டிஷ் அரசியலமைப்பைப்போல் இதுவும் நெகிழக் கூடியதாயிருக்கலாம். இந்தி யாவுக்கும் பொருத்தமாயிருக்கும்படி, டொமினியன் அந்தஸ்து என்ற பதத்தை வியாக்யானம் செய்ய முடியுமானால், இந்தியா இங்கிலாந்துடன் ஒரு கௌரவமான சமரசம் செய்து கொள்ள முடியுமானால், வார்த்தைகளைப்பற்றி நான் சண்டை போட மாட்டேன். இந்தியா விஷயத்தில், மற்ற வார்த்தைகளைவிட. டொமினியன் அந்தஸ்து என்ற வார்த்தை உபயோகிப்பது சௌகரியமானதென்று பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் கருதினால் நான் சண்டை போடப்போவதில்லை."

"பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு வெளியே இந்தியா பூர்ண சுதந்தரத்துடன் இருக்க வேண்டுமென்று ஸ்ரீ போஸும், அவரைப்போன்றவர்களும் சொல்லுகிறார்களோ" என்று அமெரிக்க நண்பர் கேட்டார்.

"அதெல்லாம் வார்த்தைகளில்தான் வித்தியாசம். நாங்கள் வெவ்வேறு பாஷையை உபயோகித்தாலும், இந்தப் பிரச்னையில் எனக்கும் சுபாஷ் பாபுவுக்கும் வித்தியாசம் இருப்பதாக நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். நான் சொன்னதுபோன்ற சம அந்

தஸ்துள்ள பங்காளிகள் என்ற நிலைமை ஏற்பட முடிந்தால், சுபாஷ் பாபு அதை மறுக்கமாட்டார். ஆனால், இன்று அவரிடம் இதைச் சொன்னால், ஒருக்கால் அவர் முடியாதென்று சொல்லுவார். சிலர் நினைப்பதுபோல் பிரிட்டிஷார் அவ்வளவு சுலபமாகப் பணிந்துவிட மாட்டார்களென்று அவர் சொல்லுவார். என்னிடம் அவர் அப்படிப் பேசினால், நான் அதை மறுக்க மாட்டேன். ஆனால், என் சுபாவத்திற்கு இந்த வார்த்தைதான் எனக்குப் பிடித்திருக்கிறது. மேலும் எல்லா இடங்களிலுமே மனிதசுபாவம் ஒரே மாதிரியானது தான் என்பது என் நம்பிக்கை. ஆகையால், நான் உபயோகிக்கும் பாஷைதான் எனக்குப் பிடித்தமாயிருக்கிறது என்று அவரிடம் சொல்வேன்' என்று காந்திஜி பதிலளித்தார்.

## பெடரேஷன்

பெடரேஷனைப்பற்றி, காந்திஜிக்கும், அதிகாரிகளுக்கு மிடையே ஏதாவது பேச்சு வார்த்தைகள் நடக்கின்றனவா வென்று நிருபர் கேட்டார். "ஒன்றுமில்லை. இதைப்பற்றி பத்திரிகைகளில் வரும் செய்திகளெல்லாம் வெறும் கற்பனையே. இப்போதுள்ள வைஸ்ராய் அப்படிப்பட்டவரல்ல. எதையும் ரகசியமாகச் செய்வதில் அவருக்கு நம்பிக்கை கிடையாது. தன் நிலைமை என்ன வென்பதை நன்றாக, பட்டவர்த்தனமாகச் சொல்லிவிடுகிறார். எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது. பகிரங்கமாக பேச்சு வார்த்தைகள் நடத்துவதன் மூலம் எதுவும் கெட்டுப்போய் விடா தென்று அவர் நம்புவதாகவே நான் நினைக்கிறேன். ஆனால், காங்கிரசுக்கோ, முஸ்லிம்களுக்கோ, சமஸ்தானாதிபதிகளுக்கோ பிடித்த மில்லாமலிருக்கும்போது, பெடரேஷன் வராதென்றே நான் கருதுகிறேன். பிரியமில்லாமல் அதிருப்தியடைந்திருக்கும் இந்தியாமீது பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் பெடரேஷனைச் சுமத்தமாட்டார்களென்றும், எல்லா கக்ஷிகளையும் திருப்தி செய்யவே முயற்சிப்பார்களென்றும் தான் என் நம்பிக்கை. இந்தியாமீது அவர்கள் பெடரேஷனை சுமத்தினால் அது முதல்தரமான விபரீதமாயிருக்கும். எதிர்ப்பும், அதிருப்தியும் நிறைந்திருக்கும்போது, பெடரேஷனை அமுலுக்குக் கொண்டுவர முடியாது. எந்தக் கக்ஷிக்குமே பெடரேஷன் பிடிக்க வில்லையென்றால், அதை மீறி அதை சுமத்துவது அசட்டுத்தனத்தின் சிகரமாகும்" என்று காந்திஜி சொன்னார்.

## இறுதி எச்சரிக்கைக்கு பக்க பலம் இல்லை

"சரி அப்படியானால் வேறு வழி என்ன?" என்று கேட்டார். "வேறு வழியா? எல்லோருக்கும் திருப்தியளிக்கக்கூடிய—அல்லது யாருக்காவது ஒருவருக்கு திருப்தியளிக்கக்கூடிய—எதையாவது அளிப்பதுதான்" என்றார் காந்திஜி.

கேள்வி:—இறுதி எச்சரிக்கை அனுப்புவதுதான் சிறந்த வழி என்று சுபாஷ் பாபு சொல்வதை நீங்கள் ஒப்புக்கொள்ளவில்லையா?

காந்திஜி—சுபாஷ்பாபுவுக்கும் எனக்கு மிடையேயுள்ள அடிப்படையான வித்தியாசம் அதுதான். இறுதி எச்சரிக்கை கொடுக்க வேண்டு மென்பது தவறல்ல. அதற்கு நல்ல பக்கபலம் வேண்டும். இன்று அத்தகைய அஹிம்ஸா பலம் இல்லை. எல்லாக் கக்ஷிகளும் கௌரவமான ஒரு சமரசத்திற்கு வந்தால், சுலபமாக அந்த பலத்தை சிருஷ்டித்து விடலாம்.

கேள்வி :—இறுதி எச்சரிக்கைக்கு இது சமயமல்ல வென்றால், அடுத்தாற்போல் என்ன செய்யவேண்டும் ?

காந்திஜி :—எங்கள்வீட்டை முதலில் சரிப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்து பல சிறப்பட்டவர்களையும் ஒன்று சேர்த்தவுடன், நாங்கள் தயாராயிருப்பேரம்.

கேள்வி :—அமெரிக்காவிலிருந்து நீங்கள் என்ன உதவி எதிர்பார்க்கிறீர்கள் ?

காந்திஜி :—எவ்வளவோ எதிர்பார்க்கிறேன். சிநேகபாவத்தில் எங்கள் தவறுகளை எடுத்துக் காட்டுங்கள். இப்போது ஒன்று ஆகாயத்தில் தூக்கி வைக்கிறீர்கள் ; அல்லது விஷயமே தெரியாமல் கண்டிக்கிறீர்கள். அமெரிக்கர்களுக்கு சரியான முறையில் விஷயங்களை தெரிவிக்க உங்கள் பத்திரிகைகள் ஒரு முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை.



" ஸ்ரீரஞ்சனி " சக்தி மாயாவில் ஒரு காட்சி.

# 8

சினிமாக் கூட்டத்தை விலக்கிக்கொண்டு ஆத்திரத்துடன் சென்ற தங்கம்மாளும் சங்கரனும் தம்மை மறந்துபோய்க் கூவிக் கொண்டே அங்கு நிற்கும் மூவருடைய கைகளையும் பிடித்துக் கொண்டார்கள். தங்கம்மாள் புலம்பியபடியே, "மன்னீ! மன்னீ! இதென்ன அநியாயம்! நீ பிறந்த குடும்பத்தின் கௌரவமென்ன! நீ புகுந்த குடும்பத்தின் கண்ணியமென்ன! உன் குடும்பத்தின் மதிப்புத்தான் என்ன! எல்லாவற்றையும் குலைத்துக்கொண்டு நீ இப்படியா பாழாய்ப் போவது? மன்னீ! அயல் புருஷன்மீது உராய்ந்துகொண்டு கோமளி நிற்கும் கண்ணுவியை என்னால் கண்டு சகிக்கமுடியவில்லையே! பார்வதி! உன்னையுமா உன் தாயார் இம் மாதிரி அவக்கேட்டிற்கு விட்டுவிட்டாள்! கோபி கூடவா இதைக் கண்டிக்கவில்லை?" என்று கதறுகிறாள்.

சங்கரன் இந்த விசனமும் அவமானமும் தாங்காமல் வயிற் றிலும் தலையிலும் அடித்துக்கொண்டு, "ஐயையோ! என் வயிறு பத்தி எரிகிறதே! அடீ பாவி! என் குடும்பத்தின் மானத்தைச்சிதற வடிக்கச் சண்டாளி நீ எங்கிருந்தடீ தோன்றினாய்?" என்று கூறி முடிப்பதற்குள், அவன் மனைவியாகிய பொன்னம்மாளும், புதல்வி கோமளியும் ஏற்கெனவே தீர்மானித்திருந்தபடி, "ஐயையோ! இந்தப் பயித்தியம் இத்தனை வருஷங் கழித்து எப்படி வந்துவிட்டது. ஐயோ! அதைப் பிடித்துத் தள்ளுங்கள். இல்லாவிட்டால் கையில் கிடைத்ததைக் கொண்டு மண்டையை உடைத்துவிடும். நாங்கள் இதோடு பட்டு பட்டு, தலை மொட்டையாகிவிட்டது!" என்று ஒரே சாகஸத்துடன் கூவிக் கையை உதறினார்கள்.

இதைக்கேட்ட சங்கரனுக்கு எரிகிற அடுப்பில் எண்ணெயை வார்த்ததுபோல் பின்னும் பற்றி எரிகிறது. இவள் நெஞ்சழுத்தத் துடன் கூறிய வார்த்தைகள் கூரிய பாணம்போல் அவனுடைய இதயத்தில் பாய்ந்தன. தங்கம்மாளையும் தூக்கி வாரிப்போட்டது.

ஆச்சரியத்துடன், "ஐயோ! அநியாயக் கொள்ளையே! நீ செய்யும் அசம்பாவிதத்தை மறைக்க கட்டிய கணவனையே மனந்

துணிந்து பயித்தியம் என்று கூற உனக்கு அத்தனை தைரியம்வந்து விட்டதா! இது கடவுளுக்குத்தான் சம்மதமாகுமா? இத்தனை வய தாகிய பிறகு உன் புத்தி இப்படியா மாறி சீர் குலையவேண்டும்?'' என்றாள்.

பொன்னம்மாள் :—போதும்! போதும். இனிமேல் உங்கள் நாத்தனார் அதிகாரம் இங்கு வேண்டாம். கட்டிய கணவனாகட்டும்; கட்டாத கணவனாகட்டும். சம்சாரத்தை வைத்துப் படைக்க வக்கு இல்லாமல் பயித்தியம் பிடித்துப் பாயைப் பிறாண்டி வீட்டில் ஹதம் செய்தது போதாமல் கல்லை விட்டு எறிந்துகொண்டு ஊர் சுத்தி அலையப்போய்விட்ட பிறகு எப்படி இருக்கும்? பயித்தியத்தைக் கட்டிக்கொண்டு யார் மாரடிப்பது?

சங்கரன் :—ஹா! ஹா! அடீ! சாகஸக் கள்ளீ! எனக்காடீ பயித்தியம் பிடித்துவிட்டது! நானாடீ பயித்தியம்! நானா கல்லைவிட்டு எறிந்தேன்? நானா மூளை கலங்கி ஊர் சுற்றினேன். ஐயையோ! அடி பேமானீ! உன்னையல்லவா ஜனங்கள் கல்லால் அடித்துக் காறி உமிழும்படி நீ மரியாதைதேடிக்கொண்டிருக்கிறாய். கட்டிய கணவனை அவன் எதிரிலேயே பயித்தியமென்று கூறத் துணிந்த நீ வேறு என்னதான் செய்யமாட்டாய்? சீச்சீ! துஷ்டே! இந்த வெட்கக்கேட்டை என்னால் சகிக்கமுடியாது. போனது போகட்டும். உம். புறப்படு. என்னோடு வீட்டிற்கு வா. பாழாப்போன ஸினிமா மோகத்தில் மூழ்கி நாசமாகித் தவிக்கும் குடும்பப் பெண்களையும் ஆண்களையும் உனக்குக் காட்டட்டுமா? ஏன் உன் புத்தி அந்தகாரமாகி விட்டது? உம். கோமளீ! கிளம்பு'' என்று கோமளியின் கையைப் பிடித்து இழுத்தார்.

கோமளி லபோ திபோ என்று அடித்துக்கொண்டு கூச்சலிட்ட வாறு, ''ஐயையோ! ஐயையோ! இந்தப் பயித்தியத்தை அடித்து விரட்டுங்களேன். முன்பொரு தரம் இப்படித்தான் என்னை இந்தப் பயித்தியம் இழுத்துக்கொண்டு போய் கிணற்றில் தள்ளிவிட்டு வேடிக்கைப் பார்த்தது. நல்லவேளையாய் ஒரு வழிப் போக்கன் என்னைக் காப்பாற்றினான்'' என்று கூச்சலிட்டதைக் கேட்ட கூட்டத்திலிருந்த எல்லோரும் அந்தச் சினிமா ராணியின் வாயி

விருந்து வரும் வார்த்தைக்கு வெகு வெகு மதிப்புக்கொடுத்து சங்கரனின் தேகத்தில் அகப்பட்ட இடத்திலெல்லாம் தமது சுதந்தரத்துடன் தூசி தட்ட வாரம்பித்துவிட்டார்கள்.

இதற்குள் சினிமாவைச் சேர்ந்த சொந்தக்காரன் சங்கரனை வெகு கடினமான பார்வையில் பார்த்து "டேய், கிழவா! நீ பயித்தியமோ பண்டாரமோ எனக்கு அவசியமில்லை. என்னை மிரட்டி கிரட்டி இவர்களை இழுத்துக்கொண்டுபோக நினைக்கிறாயே அது உங்க முப்பாட்டன் வந்தாலும் நடக்காது. என் தெரியுமா? எல்லோரும் மைனர் நீங்கியவர்கள். என் அக்ரிமெண்டில் கையொப்பமிட்டிருப்பது ஞாபகமிருக்கட்டும். எல்லோரையும் கோர்ட்டுக்கு இழுத்து விடுவேன்.

சினிமாவை மிகவும் எளப்பமாய்ப் பேசுகிற நாக்கை அறுத்து விடுவேன் பத்திரம். சினிமாவை ஏளனம் செய்யும் நீ பெண்டாட்டி பிள்ளையை விட்டு பயித்தியம் பிடித்து ஏன் ஓடினாய்? நீ எளப்பம் செய்யும் அந்தச் சினிமாதான் இப்போது அவர்களைப் காப்பாத்துகிறது. வேண்டுமானால் அடங்கி ஒடுங்கி நீயும் இதிலே வந்து சேர்ந்துவிடு. இல்லையேல் பேசாமல் போய்விடு. காரியமாய் வந்த இடத்தில் இதென்ன நியூஸன்ஸ்?" என்று தன்போக்காய்க் கர்ஜித்தான்.

அடுத்த நிமிடமே கோகிலா, "சார்! இந்தப் பைத்தியத்தினிடம் உமக்கென்ன பேச்சு? வாருங்கள் நாம் போய்விடலாம். பிறகு வந்து சாமி பார்க்கலாம்" என்று கூறிக்கொண்டே காரில் ஏறினாள். பொன்னம்மாளையும் அந்த முதலாளி காரில் தள்ளிவிட்டு, சுகுணாவின் கையைப் பிடித்துக் காரில் ஏற்றப்போனான்.

தங்கம்மாளின் மனம் பதறிப் போய்விட்டது. "அடீ! பாதகீ! ஐயையோ! நீயாவது வந்துவிடு. என்னால் இந்தக் கண்றாவியைச் சகிக்கமுடியவில்லை" என்று கூறியபடியே பார்வதியின் கையைப் பிடித்து இழுத்தாள்.

பார்வதி முதலில் பாட்டியைக் கண்டதும் நடுங்கினாளேயன்றி, பிறகு கூடவிருப்பவர்களின் குண்டு தைரியம் இவளுக்கும் வந்துவிட்டதால் பாட்டியின் புலம்பலுக்கோ பேச்சுக்கோ பதிலே

183034.

சொல்லவில்லை. அவள், அலக்ஷியமாயும் திமிருடனும் முதலாளியின் பக்கத்திலேயே நின்றாள்.

தங்கம்மாளுக்குப் பொங்கிவரும் ஆத்திரத்தில் அவள் வாயில் வந்த விதமெல்லாம் பேசினதால் கூட்டத்தில் அவளுக்கு அடியும் உதையும் தாராளமாக விழ வாரம்பித்ததும் அவளால் தாங்க முடியாது சற்று விலகிக்கொண்ட சமயமே பார்வதி காரில் ஏறினாள்; ஆகையால், அவளைப் பிடித்து இழுத்தாள்.

கார், தன் அட்டகாஸ இறைச்சலுடன் கிளம்பிச் சென்ற வேகத்தில் தங்கம்மாள் காரின் கூடவே சிறிது தூரம் இழுபட்டுத் தடாரென்று விழுந்தாள். அவளுடைய முகத்திலும் கை கால்களிலும் பலத்த அடிபட்டு அப்படியே அதிர்ச்சியால் மூர்ச்சையாகிப் போய்விட்டாள்.

சங்கரன் அவமானமும் ஆத்திரமும் கூடித் தவிக்கும் சமயம் தனக்குப் பயித்தியம் என்கிற பட்டத்தையும் கட்டி, பல பேர் எதிரில் தன் மகளும், மனைவியுமே அவமானப்படுத்தியதும் பொது ஜனங்கள் அடிக்கும் அடியும் ஒன்றுகூடி, அவனை உண்மையில் மூளை கலங்கச் செய்து, பயித்தியமாகவே ஆக்கிவிட்டதுபோலாயிற்று.

'ஐயோ! நான் பயித்தியமல்ல. நான் உங்களைப் போல் சுய புத்தியுடன்தான் இருக்கிறேன். வீணாக அந்தச் சண்டாளி சினிமா மோகத்தின் திமிரினால் என்னைப் பயித்தியம் என்று கூறினாள். என்னை அடிக்காதீர்கள் என்று சங்கரன் எத்தனை கதறியும் சோதாக் கூட்டங்கள் ஏதோ தமது கடமையைச் சரிவரச் செய்வதேபோல் பாவித்து, கைசலிக்க அடிக்க வாரம்பித்தார்கள்.

ஐயோ! பாவம். தள்ளாத வயதான சங்கரன் ஏற்கெனவே பட்டினியும் பசியுமாய் இருந்ததால், இந்த அடியும் அவமானமும் ஒன்று கூடி அவன் பிரக்ஞையே அற்றுவிட்டானென்றால் மிகையாகாது.

கோயில் தர்மகர்த்தாவுக்கும் சங்கரன்மீது கடுங்கோபம் வந்துவிட்டது. இந்த நாசமாய்ப்போன மனிதன் குறுக்கே வந்ததனால் தான் இன்று தனக்குக் கிடைக்க விருந்த லாபம் போய்விட்ட

தென்ற ஆத்திரத்தால் அவனும் கடின சித்தத்துடன் விலகிப்போய் விட்டான்.

கோபுரவாசலில் பிச்சை வாங்கும் ஒருகால் இல்லாத நொண்டி மட்டும் இதைக் கண்டு சகிக்காமல் கட்டையை யூன்றிக்கொண்டே அங்கு வந்து, "ஐயா! இப்படியா அநியாயமாய் அடித்துக் கொல்வது? போலீஸ்காரனைக் கூப்பிடுகிறேன் பாருங்கள்" என்று ஜீவகாருண்யத்துடன் கூறினான்.

சோதாக் கூட்டங்கள் சற்றும் தாக்ஷிண்யமின்றி, "டேய்! நொண்டீ! நீயாடா போலீஸ்காரனைக் கூப்பிடப்போகிறாய். போ! போ! கூப்பிடு பார்க்கலாம்" என்று கூறிக்கொண்டே நொண்டி யின் கைக் கட்டையைப் பிடுங்கிக்கொண்டு ஓட்டம் எடுத்தார்கள்.

முடவனுக்கு இருக்கும் ஜீவகாருண்யங்கூட கொட்டாப்புளி மனிதர்களுக்கு இல்லாததுதான் கலியுகத்தின் விந்தையாகும். நொண்டிக்குத் தற்சமயம் அவன் உயிர்போன்ற பொருள் அந்தக் கட்டையல்லவா! அதை அந்தச் சோதாக்களிடம் பறி கொடுத்து விட்டுக் கலங்கியபடியே "ஐயா! ஐயா!" என்று கூவினான்.

அச் சோதாக்கள் ஏளனமாகச் சிரித்துக்கொண்டே போய்க் கைத்தடியைத் தூரத்தில் போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். நொண்டி பாவம், உட்கார்ந்து டேக்கிக்கொண்டே அத்தனை தூரமும் சென்று கட்டையுடன் திரும்பிவந்து பார்க்கையில், சங்கரன் அப்படியும் இப்படியும் புரண்டுகொண்டிருந்தான்.

நொண்டி அன்போடு அருகில் வந்து உட்கார்ந்து, "ஐயா! இதோ பாருங்கோ! சோதாக்கள் எல்லாம் போய்விட்டார்கள். ஐயா! பேசமுடியவில்லையா! வலிக்கிறதா?" என்று கூறிக் கொண்டே தனது கந்தலான உடையிலிருந்து கொஞ்சம் துணியைக் கிழித்து, சங்கரனின் நெற்றியில் ஒழுகும் ரத்தத்தைத் துடைத்தான்.

சங்கரனுக்கோ, அந்த நொண்டியின் பரிதாபகர்மான முகமும் அவன் காட்டும் அன்பும் பிரமிக்கச் செய்தன. வாயோ திறக்க முடியவில்லை. தேகம் பூராவும் வலி தாங்கமுடியாது தவிக்கின்றது. நொண்டியின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "அப்பா! நீ யாரோ! நான் யாரோ! உனக்கு இருக்கும் பச்சாத்

தாபங்கூட கட்டிய மனைவிக்கும் என் வயித்தில் பிறந்த மகளுக்கும், இல்லாதுபோய்விட்டதே! ஐயோ! கலியின்கூத்தே! கானல் நீரைக் கண்டு ஏமாந்து உண்மை நீரை இழந்துவிட்டவர்களின் கதியைப் போலல்லவா இவர்களை இந்தச் சினிமா மோகம் செய்கிறது! என்ன செய்வேன்?'' என்று கண்ணீர்விட்டார்.

நொண்டி :—ஐயா! காலச் சக்கரத்தின் கோலத்தை நீங்கள் அறியாததல்லவே. அரசனை நம்பி புருஷனைக் கைவிட்டாளாம் என்கிற பழமொழி யொன்று உண்டு. அது தங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா! அந்தப் பழமொழியின் உண்மைப் பலனை இக் காலத் தில் அநேகர் அடைகிறார்கள். ஐயா! நம்முடைய ஔவைப் பாட்டி யார் நம் போன்றவர்களுக்காகவே, "சற்று ஏறுமாறாக இருப்பாளே யாமாயின், கூறாமல் சந்நியாசங்கோள்" என்று பாடி யிருப்பதை நினைத்துப் பாரும். அந்தம்மாளுக்கு என்ன வழி? கீழே விழுந்து கிடக்கிறார்களே!

சங்க :—அப்பா! எனக்கே என்ன வழி என்று ஒன்றுந் தெரி யாது நான் தவிக்கையில், அவளுக்கு நான் என்ன வழி தேடுவேன்? அவளுடைய பெரிய பிள்ளையின் விலாசத்தைக் கொடுத்து அங்கு கொண்டு விட்டுவிடும்படியாகக் கூறிவிட்டு நாம் இந்தத் திக்கி லேயே இல்லாது கண் மறைவாகத் தொலைந்துபோய்விடுவோம் என்ன சொல்கிறாய்?

நொண் :—ஐயா! எனக்குத் தெரிந்த மாட்டுவண்டிக்காரன் ஒருவன் இருக்கிறான். அவனைக் கூப்பிடுகிறேன். வண்டியிலேற்றி ஜாக்ரதையாகக் கொண்டுவிட ஏற்பாடு செய்துவிட்டு நாம் போக லாம்—என்று கூறிவிட்டுத் தன் பக்கத்திலுள்ள பிச்சைக்காரப் பையனை விட்டு வண்டிக்காரனை அழைத்து வரச் செய்து, தங்கம் மாளை அதில் ஏற்றி வண்டிக்காரனிடம் முத்துச்சாமியின் விலாசத் தைக் கூறித் தங்கம்மாளை ஜாக்ரதையாக அங்குக் கொண்டுவிடும் படியாய்ச் சொல்லியனுப்பிவிட்டார்கள்.

தங்கம்மாளுக்கு மயக்கம் தெளிந்துவிட்டால் ஒரு வேளை தன்னைவிட்டுப் போவாளோ, மாட்டாளோ! வீண் உபத்திரவம் இனி தனக்கு வேண்டாம் என்கிற வெறுப்பினால் தன்னுடன்

பிறந்தவளையும் சங்கரன் நிராகரித்துவிட்டான். ஆனால், மனம் மட்டும் சற்றுத் தவித்தது.

தங்கம்மாளின் தேகத்திலுள்ள ரத்தத்தைத் தானே துடைத்து விபூதியைத் தடவிக் கட்டிவிட்டு, "உம். உன் தலைவிதியை நீ அநுபவி. என் விதியை நான் தொலைக்கிறேன்" என்று கூறிவிட்டு, நொண்டியுடன் நடக்க வாரம்பித்தார். நொண்டியும் தனது இனிமையான சாரீரத்தினால்,

அஸாவேரி ராகம்—சாப்பு தாளம்

1. கானல் நீரல்லவோ மானிட வாழ்க்கை !
கருத்திலறிவதில்லையே (கா)

2. ஹீன ஜென்மந்தன்னை ஹீன மென்றறியாமல்
வானக் கோட்டைகள் கட்டி வாழ்க்கையை நம்பாதே (கா)

3. தோன்றுவன வெல்லாம் தோற்றத்தில் பலியாது
தோன்றிய தோற்றமே தோல்விக்குத் துணையாம் (கா)

4. கிட்டாத பொருள் தன்னைக் கிட்டிட ஆசை கொல்லும்
எட்டியதாய் எண்ணி ஏங்கி ஏமாறாதே (கா)

5. நாடுவதொன்றும் நடப்பது ஒன்றும்
நாடகமாம் இதை நன்கறிவாய் நெஞ்சே (கா)

6. மானிலமளந்திட்ட மாயாவதாரனின்
ஊனமில் அருளொன்றே உற்ற பெருந் துணை (கா)

7. அஞ்ஞான இருள் தன்னை அகற்றி யுன் வாழ்க்கையை
சுஞ்ஞான ஒளி பெற்றுச் சுகமுறுவாய் நெஞ்சே ! (கா)

—மாயப்ரபஞ்சம். (பக்—41.)

என்ற பாட்டைப் பாடிக்கொண்டே நடந்தான். நொண்டியின் அபாரமான அன்பைப் போலவே அவனது சங்கீதமும் அமைந்திருந்ததைக் கேட்டுச் சங்கரனின் மனம் உருகியது. அப்பாடலின் அர்த்தத்தை அனுபவித்தபடியே நடக்கலானான்.

# 9

லீலாவதி புத்தகம் படிப்பவள்போல் உள்ளே உட்கார்ந்திருக்கையில், வெளியில் பேசும் வார்த்தைகள் அவள் இதயத்தைப் பிளந்தன. அவள் மெல்ல கதவருகில் வந்து உட்கார்ந்தாள். அந்தச் சம்பாஷணைகளாவன :—

ஒருத்தி :—என்ன சுந்தரீ ! இந்த யோசனை சரிதானே !

சுந்த :—சரிதான் ஸிஸ்டர் ! என்ன விருந்தாலும் ஒரு பயித்தியத்திற்கு லீலாவைக் கொடுப்பதென்றால், சற்று யோசனையாயிருக்கிறது. என்ன செய்வது ?

மற்றொருத்தி :—ஐயோ ! அசடே ! யோசனையா ! என்ன யோசனை இருக்கிறது. என் கதை உனக்குத் தெரியுமா ?

சுந்த :—தெரியாதே ! என்ன சமாசாரம் ?

முன்னவள் :—என் தாயாருக்கு மொத்தம் 14 குழந்தைகள் பிறந்தன. அதில் நான்தான் கடைசீ குட்டி. முதல் பெண்ணாகிய எங்க அக்கா கல்யாணமாகி, 7, 8 குழந்தைகளைப் பெற்றுவிட்டு நாட்டுப் பெண்ணும், மாப்பிள்ளையும் வரும் சமயத்தில் இறந்துவிட்டாள். என் அக்கா புருஷன் மறுபடியும் கல்யாணம் செய்து கொள்ள ஆசை தூண்டித் தவித்தார். பணம் ஏராளமாயிருந்தது. அப்போது எனக்கு வயது 12. அவருக்கு வயது 51. இந்தக் காலத்தைப் போல் சாரதா சட்டம் அப்போது ஏது? என் பெற்றோர்களும் இசைந்தார்கள். கல்யாணமும் ஆகிவிட்டது. நான் பெரிய பணக்காரியாகிவிட்டேன். கிழவரும் செலவு பெற்றுக்கொண்டு விட்டார். இப்போது நான் சு[illegible]சாதிகாரமாய் இருக்கிறேன். ரிஜிஸ்தர் கல்யாணம் செய்துகொள்ளவும் எனக்குச் சௌவுகரியம் இருக்கிறது.

வேறொருத்தி :—ஆமாம். இந்தக் காலத்தில் இப்படி எல்லாம் பார்த்தால் ஆகாது. பணந்தான் ப்ரதானம் தெரியுமா ! நிறைய பணம் அடிக்கலாமென்றால் பயித்தியமானால் என்ன ? பண்டாரமானால் என்ன முழுகிப்போய்விட்டது ? இந்த இன்ஷ்யூரன்ஸி

ஏஜெண்டு வேலையை எத்தனை நாளைக்கு உன் புருஷன் நம்பி இருப்பது? போட்டியோ அதிகமாகிவிட்டது. பேசாமல் பெண்ணைக் கொடுத்துவிட்டால், நீங்கள் சொல்கிறபடியே அந்த மாப்பிள்ளை ஆடும். காசை நீங்கள் இஷ்டப்பட்டபடி செலவிடலாம். இந்தத் தருணத்தைக் கைவிட்டால், 'நான், நீ' என்று போட்டிப் போடுகிறவர்கள் அடித்துக்கொண்டு போய்விடுவார்கள்.

**இன்னொருத்தி** :—சுந்தரீ! இக்காலத்தில் பணத்தைச் சரியான வழியில் செலவிடுவதற்குத் தகுந்த வியாபாரம் சினிமாத் தொழில்தான். நாம் என் அந்தப் பணத்தைக் கொண்டு ஓர் சினிமா கம்பெனி தயார் செய்து ஒண்ணுந்தரமான படமெடுத்து அதில் இரண்டு பங்காக லாப மெடுக்கக் கூடாது? ஆகையால், இதை விடாது முடிப்பதுதான் நலம். யோசிக்காதே!

**சுந்தரி** :—அந்தப் பிள்ளைக்கு வார்சு யார் இருக்கிறார்கள்?

**ஒருத்தி** :—ஊம். எவனோ வழியில் போகிறவனெல்லாம் வார்ஸ், என்று ஒட்டிக்கொண்டிருக்கிறான்கள். முக்கியமான தாய் தகப்பன் இல்லை. வேறு யார் இருந்தாலும் ஏமாற்றி, கண்ணில் மிளகாய் தூவி விடலாம். கல்யாணமாகிய சுருக்கில் ஒரு குழந்தையைப் பெற்றுவிட்டால், சகல சொத்தும் உனக்கே உரித்தாகிவிடுமல்லவா? உன் புருஷனுக்கு இந்த இடம் வெகு சம்மதமாகிவிட்டது. அதை இப்போதுதான் கிளப்புக்குச் சென்று நாங்கள் கேட்டுக்கொண்டு வந்துவிட்டோம். நாளை மறுநாள் நாம் எல்லோரும் பிக்னிக் பார்ட்டிக்குப் போவதாகத் தயார் செய்துகொண்டு போவோம். அங்கு அந்த ஜமீந்தாரின் மகனும் வரும்படி ஏற்பாடு செய்திருக்கிறது. என்ன சொல்கிறாய்?—என்றாள்.

இதைக்கேட்ட சுந்தரிக்கு ஆசை கொஞ்சங் கொஞ்சமாய் தலை தூக்க ஆரம்பித்தது. "லீலா என்ன சொல்வாளோ! என்ன! சொல்வதென்ன! பணந்தானே பிரதானம். என் இஷ்டப்படிதான் நடக்கவேண்டும்" என்றெல்லாம் தனக்குள் தானே எண்ணமிட்டவண்ணம், "சரி! நான் நாளை சொல்லுகிறேன். அவசரப்பட வேண்டாம்" என்று ஒருமாதிரி முடித்தபடியே, "லீலா! லீலா! ஆயிற்று?"—என்று கூப்பிட்டாள்.

இந்தச் சதியாலோசனையைக் கேட்டு மனந் தவித்தவாறு கதவோடு கதவாய் ஒட்டிக்கொண்டு நின்ற லீலாவுக்கு ஆத்திரமும் துக்கமும் சகிக்க முடியாது தொண்டையை அடைத்துவிட்டது. "பெத்த தாயாரா தன் மகளுக்கு இப்படி சதிசெய்யத் துணிவாள்! ஐயோ! இப்படிப்பட்ட அநியாயமும் உலகத்தில் நடக்குமா? நான் அவள் வயிற்றில் பிறந்த மகளா அல்லது பணம் சேகரிக்கும் வியாபாரக் கருவியா?

"ஒழுக்கம் அற்று ஊர் சிரிக்கும் நாடோடிப் பெண்களுடன் சகவாஸம் செய்வதால் உன் தாயாரின் புத்தியும் கெட்டு விடுகிறது" என்று பாட்டி அடிக்கடி சொல்லிவந்ததன் உண்மை இப்போதல்லவோ வெட்ட வெளிச்சமாய்த் தெரிகிறது. இங்கு கூடியுள்ள பெண்களில் ஒருத்தியாவது குடித்தனப்பாங்கும் உத்தமப்போக்கும் கொண்டவளாயிருந்தால், என் தாயின் மனத்தைக் கலைத்து போதிக்க வருவாளா! ஒருத்தியாவது குறுக்கே பேசாமல் தாளம் போடுவதிலிருந்து என்னை மூலதனமாகவைத்துத் தாங்களும் அந்தப் பயித்தியத்தின் சொத்தில் வயிறு வளர்க்கும் வியாபாரம் செய்வதற்குத் தயாராக இருப்பதாகவன்றோ தெரிகிறது.

அந்தோ! இந்தச் சமயம் இதற்காகத்தான் என் பாட்டியை அடித்துத் துரத்தி இருக்கிறார்கள் என்கிற எனது சந்தேகம் ஊர்ஜிதமாகிவிட்டது. என் பாட்டி எங்கு அலைகின்றாளோ? என்ன செய்கின்றாளோ? இச் சமயம் இவ் விபத்திலிருந்து எப்படித் தப்புவேன்?" என்று தனக்குள் குமுறிக்கொண்டிருக்கையில், தன்னை தன் தாயார் கூப்பிடும் சப்தத்தைக் கேட்டதும் சில வினாடிகள் தயங்கினாள்.

உடனே ஒரு யோசனை தோன்றப்பெற்றவளாய், தலைவலி மருந்தை எடுத்துத் தடவிக்கொண்டு, "ஹா! ஊ! அம்மாடீ! தலையை உடைக்கிறதே!" என்று அலற்றிக்கொண்டிருந்தாள்.

அடுத்த நிமிடமே சுந்தரி, "லீலா! லீலா! இன்னுமா ட்ரஸ் பண்ணிக்கொள்ளவில்லை? நேரமாகிவிட்டது. வா!" என்று கூறிக் கொண்டே உள்ளே வந்தாள். லீலா படுத்துப் புரளுவதைக் கண்டதும் சற்றுச் சலிப்புற்றவளாய், "சரிதான்! தலைவலி வந்து விட்டதா!

பாட்டி இருக்கும்போதுதான் இந்த உபத்திரவம் செய்யும்படித் தூண்டி உன்னைப் பாழாக்கினுள். இப்போது கூட உனக்கு ஏன் இந்தப் புத்தி. வா ! கடற்கரைக்கு உலாவச்சென்று வரலாம். தலை வலி எல்லாம் பறந்துபோய்விடும். எழுந்திரு" என்றுள்.

லீலா :—(வினயமாகப் பேசத்தொடங்கி) "அம்மா ! நான் என்ன சொன்னுலும் உனக்குக் குற்றமாகவே தோன்றுகிறது. வீணுகப் பாட்டியை ஏன் இழுக்கிருய் ? எனக்குத் தலைவலி மட்டு மிருந்தால் வந்து விடுவேன். இதற்குள் மூன்று தரம் வாந்தியாகி விட்டது. வரும் இடமெல்லாம் வாந்தி எடுத்துக்கொண்டே வந் தால் அது அழகாம்மா ! நான் வீட்டிலிருக்கிறேன்; நீங்கள் போய் வாருங்கள். நாளையதினம் நான் வருகிறேன் " என்று நிதான மாகக் கூறித் தாயாரை நல்லதனமாகவே ஏமாற்றி, அவளை அவள் சகபாடிகளுடன் தளுக்காய் அனுப்பிவிட்டாள்.

ஆனுல், அவள் மனம் நிம்மதி யடைந்ததா ! பாட்டியைக் காணுத ஏக்கமும், துக்கமும் ஒருபுறம் பாதிப்பதோடு தாயார் செய்துள்ள விபரீதமான சதியாலோசனையின் பயங்கரம் ஒருபுறம் வதைக்கின்றது. அவள், இருக்கை கொள்ளாது சற்று, நேரம் தவித்தாள்.

தன் பாட்டியின் புத்தகங்களை எல்லாம் எடுத்து ஒன்ருக அடுக் கிப் பார்த்தாள். பாட்டியின் உயர்ந்த குணமும், பக்தி வைராக்ய சீலமும், அவள் அருமையாய்ச் செய்துவந்த பல உபதேசங்களும் அவள் மனத்தில் பளிச்சென்று ஒரு ஜோதிபோல் தோன்றிய சம யம் பாட்டியின் பிம்பம் அப்படியே எதிரில் தெரிவதுபோல் ஒரு உருவெளித் தோற்றம் உண்டாகியது.

"ஹா ! பாட்டீ ! பாட்டீ !" என்று வாய் விட்டும் கூறிக் கதறி விட்டாள். உருவெளித் தோற்றமும் மறைந்துவிட்டது. "ஐயோ ! பாட்டி ! எப்போது வந்து எனக்குப் பழையபடி நீதிகளைப் போதிக் கப் போகிருய் ? என்று நான் மறுபடியும் உன்னுடைய இனிமை யான வாயினுல் சத் விஷயங்களைக் கேட்கப் போகிறேன் ?" என்று தவித்தாள்.

"என் நாமும் பாட்டி சொல்லிக் கொடுத்துள்ள பாட்டுகளையும், விஷயங்களையும் அவளைப் போலவே பிறருக்குச் சொல்லக்கூடாது. பாட்டி படிக்கும் புத்தகத்தை வைத்துக்கொண்டு நாமும் படித் துச் சொல்லக் கூடாது. நமக்குதான் நன்றாய்ப் படிக்கத் தெரி யுமே அம்மாதிரி செய்தால் என்ன ?" என்று தனக்குள்ளேயே, யோசனை செய்தாள்.

ஏதோ ஒரு சக்தி அவளுக்குள் புகுந்து அவள் எண்ணத்தை ஊர்ஜிதப்படுத்தி 'அப்படியே செய்' என்று கூறுவதுபோல் எழுந் தது. அந்த உணர்ச்சியிலேயே அவள் உள்ளம் ஒரு சிறிய அல்ப சந்தோஷத்தை யடைந்தது. அஸ்தமிக்கும் நேரமாகி விட்டதால், ஸ்வாமிக்கு விளக்கேற்றி நமஸ்காரம் செய்து பின் தோத்திரப் பாடல்களைப் பாடினாள். தன் பாட்டியைச் சீக்கிரம் இங்கு அழைத் துக்கொண்டு வரும்படியாக வேண்டிக்கொண்டாள்.

அச் சமயம் ஒரு குருட்டுப் பிச்சைக்காரன் மனமுருகி தீன மான குரலில் பரிதாபம் நிறைந்த ஸ்வரத்தில்,

ஒருமையுட னினது திரு மலரடி நினைக்கின்ற
வுத்தமர் த முறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று
பேசுவார் உறவு கல வாமை வேண்டும்
பெருமைபெறு நினது புகழ் பேசவேண்டும்
பொய்மை பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித் தொழுக வேண்டுமத மானபேய்
பிடியா திருக்க வேண்டும்
மருவு பெண் ணாசையை மறக்கவே ண்டுமுனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டு நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வினான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கும் கந்த வேளே !
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே !

என்ற பாடலை வெகு இனிமையாய்ப் பாடிக்கொண்டே வரு வதைக்கேட்டு லீலாவின் உள்ளம் உருகியது. தன் தாய் தந்தை

யர்களுக்கு இந்தப் பாடலில் உள்ளபடி உத்தமர்களான சினேகிதர்கள் கிடைக்கக் கூடாதா! கூடாத ஒழுக்கம் கேடாக முடியும். தீயோரின் நட்பு வேய் நரகிற் கோப்பாம் என்று பாட்டி சொல்லியது போலவே அவர்கள் கதியாகிக் கொண்டிருக்கிறதே என்று தனக்குள் விசனித்தபடி வாசலுக்கு ஓடி வந்தாள்.

பிச்சைக்காரக் குருடன் பாடிக்கொண்டே வருகிறான். ஒரு கிழவி, "அம்மா! தாயே! கபோதி. ஒரு தருமம் செய்யுங்கள்" என்று கூறிப் பிச்சை வாங்கிக்கொண்டு வருகிறாள். கிழவனின் குடல் ஒட்டிக்கிடப்பதையும் அவன் பரிதாபத்தையுங் கண்டு லீலாவின் மனம் இளகிவிட்டது.

அவளை மீறிய அன்போடு அக் குருடன் பாட்டு முடியும் வரையில் கேட்டுக்கொண்டே நின்றாள். பிறகு கிழவனை நோக்கி, "கிழவா! என் கையில் காசில்லை. உனக்கு அதிகமாகப் பசித்தால், சாதம் போடுகிறேன். சாப்பிடுகிறாயா?" என்று தன் இதயத்தைத் திறந்து காட்டுவதுபோல் கேட்டாள்.

கிழவனும் அளப்பரிய சந்தோஷத்துடன், "ஹா! யாரம்மா கேக்கரது? நான் மகா பாவி. இந்த உலகத்தையும் அதன் அற்புதமான இயற்கை வனப்பையும், உன்போன்ற அன்பு மயமான பிராணிகளையும் கண்டுகளிக்க பாக்கியம் செய்யாத அந்தகன். என் பசியறிந்து நீ அன்னமிட்டால் தின்னத் தடையே இல்லை. தாயே!" என்று கம்மிய குரலில் கூறினான்.

அந்த வார்த்தை லீலாவின் மன வெழுச்சியைக் கிளறிவிட்டது. அவள் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய் வழிந்தது. 'ஐயோ, பாவம்! தான் இச்சித்த பண்டத்தை—என், தான் புசிக்கும் சோற்றைக்கூட தன் கண்ணாரக் கண்டு புசிக்கும் பாக்கியமற்றவனுக்கு எத்தனை ஆவல்தான் இருக்கும்? ஒரு மனிதனுக்குப் பிரதான அங்கம் கண் அல்லவா? உம். இதுதான் விதி என்பது. கண்ணிருந்தும் என் பிதா போன்று கடவுளைக் கூடப் பார்க்காதிருக்கும் குருடனுக்குச் சமமானவர்களும் உலகில் இல்லாமலில்லை.' என்று தனக்குள் நினைந்து வருந்தினாள்.

[library stamp]

"கிழவா! இதோ இப்படி திண்ணையின்கீழ் உட்காரு. உள்ளே போய் சாப்பாடு கொண்டு வருகிறேன்" என்று கூறி விட்டு, உள்ளே சென்றாள். சமையல்காரன் அப்போதுதான் சமையல் செய்து முடித்தான். லீலா அவனை நோக்கி, "சேஷு! எனக்காக ஒரு காரியம் செய்கிறாயா! உனக்குப் புண்ணியம் உண்டு. வாசலில் ஒரு குருட்டுப் பிச்சைக்காரன் பசியால் துடிக்கிறான்.

அப்பாவும் அம்மாவும் வந்துவிட்டால் ஒரு பருக்கைகூடப் போட விடமாட்டார்கள். ஒரு தட்டில் சாதம் எல்லாம் வைத்துக் கொடு. அவனுக்குப் போட்டுவிடுகிறேன். இதை அம்மாவிடமாவது அப்பாவிடமாவது சொல்லாதே! சாதம் போதாவிட்டால், நானாவது நீயாவது பட்டினி கிடந்து விடலாம். இல்லையேல் இப்போதே கொஞ்சம் சாதம் செய்துவிடு" என்று கெஞ்சிய குரலில் கேட்டாள்.

சமையல்காரனின் மனதும் அச் சமயம் இசைந்ததால் உடனே தட்டில் சகலமும் வைத்துக் கொடுத்தான். லீலா ஆவலே வடிவாய் அதைக் கொண்டுவந்து, "இந்தா கிழவா! சாப்பிடு'" என்று இலையைப்போட்டுச் சாப்பாட்டை வைத்தாள்.

குருடனுக்கு உண்டான சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. சாதத்தைத் தடவித் தடவி கலந்து அகோரமான பசியின் வேகத்தால் வாரி வாரிப் போட்டுக்கொண்டு சாப்பிடலானான். அவனுடைய பசியின் உச்சஸ்தாயியைக் காணக் காண லீலாவின் மனம் உணர்ச்சியினால் நெகிழ்ந்தது.

"கிழவா! மெதுவாய்ச் சாப்பிடு. தொண்டையில் விக்கிக் கொள்ளப் போகிறது" என்று அன்பாய் கூறினாள். அவனிடம் மெல்ல பேச்சுக் கொடுத்துக்கொண்டே, "என் கிழவா! உனக்குக் கண்ணு பிறவியிலேயே குருடா! அல்லது மத்தியில் குருடாகி விட்டதா! நீ இந்த உலகத்தைப் பார்த்ததே இல்லையா?" என்று அனுதாபத்துடன் கேட்டாள்.

இந்த வார்த்தையைக் கேட்டதும் கிழவனின் பார்வை இழந்த பரிதாபக் கண்ணிலும் மள மளவென்று தண்ணீர் வந்துவிட்டது. வெகு வேகமாக சாப்பாட்டை உள்ளே செலுத்திய கையும்

சற்றுச் சலித்துவிட்டது. கிழவனின் இதயத்தைப் பீறிக்கொண்டு ஒரு பெருமூச்சு வந்தது.

இதைக்கண்ட லீலா சற்றுத் திகைத்தவளாய், "என் கிழவா! நான் கேட்டது தப்பா! அப்படியிருந்தால் என்னை மன்னித்துவிடு" என்று லீலா முடிக்குமுன் கிழவன் தன் துக்கத்தை யடக்கிக் கொண்டு தொண்டையைக் கனைத்தவாறு "குழந்தாய்! நீ கேட்டதில் குற்றமே இல்லை. எனக்குக் கோபமும் இல்லை.

நான் உலகத்தையே பார்க்காத பிறவிக் குருடனாயிருந்தால், எனக்குத் துக்கமே இல்லை. கடவுள் பிறக்கும்பொழுது கண்களைப் பிரகாசமாகத்தான் கொடுத்தார். அதைவிட உயர்வான அறிவையும் ஆற்றலையுங் கூடக் கொடுத்தார்.

ஆனால், குழந்தாய்! கடவுள் காட்டுவாரேயன்றி ஊட்டுவாரோ? விளக்கை வெளிச்சத்திற்காக வைத்துக்கொள்ளுவதற்கு நம் பெரியார் கொடுக்கிறார்கள். அதை நல்ல அருமையான மார்க்கத்தில் பயன்படுத்திக் கொள்ளாமல் வீட்டிற்குக் கொள்ளி வைத்துக் கொண்டால் அது விளக்கின் குற்றமில்லையே! அதுபோல, நல்ல அறிவைப் பகவான் கொடுத்தார்; அதைச் சரியான வழியில் உபயோகித்துக் கொள்ளாவிட்டால், அது கடவுள் மீதோ பிறவியின் மீதோ குற்றமில்லையல்லவா? என் துர்ப்புத்தியின் பலன், தீய பழக்கத்தின் பலன், என்னை மத்தியில் குருடனாகச் செய்து விட்டது தாயே!

எனக்கு சொல்ப அறிவும் படிப்பும் இருந்தது. பல துஷ்டர்களின் சகவாஸத்தையும் சீட்டாட்டத்தையும் அப்போது இந்திர பதவியாயும் பிரம்மானந்தமாயும் கொண்டு வீடு வாசல், மக்கள், மனைவி, நீதி, நெறி எல்லாம் மறந்து காசு வைத்துச் சீட்டாடும் புனிதத் தொண்டில் நான் மூழ்கிக் கிடந்தேன்.

என் மனைவியின் பொன்மொழியைப் புறக்கணித்தேன். ஒரு தினம் சீட்டாட்டத்தில் வந்த விபரீத சண்டையில் என்னுடன் சீட்டாடிய சகாக்களில் ஒருவனான ரத்தினசாமி என்ற மகானுபாவன் என் முகத்தில் கண்ணு மண்ணு தெரியாது அடித்துவிட்டதன் பலன் என் கதி இம்மாதிரியாயிற்று."

என்று கூறுவதைக் கேட்ட லீலாவின் உள்ளம் தீயை மிதித்ததுபோல் துள்ளியது. "என்ன! என்ன! சீட்டாட்டத்தின் சண்டையில் கண்ணு போய் விட்டதா! ரத்தினசாமியா! அவன் யாரு?" என்று பதறியவாறு கேட்டாள்.

குருடன் :—குழந்தாய்! அவன் யாரானல் என்ன? இந்தச் சம்பவம் நிகழ்ந்து 12 வருஷங்கள் ஆகிவிட்டன. சிற்றேரி என்ற கிராமத்தில் இந்த வைபவம் நடந்தது. அந்த மகானுபாவனின் அண்ணன் முத்துச்சாமிக்கும் தெரியும். தெரிந்து என்ன பலன்?

சோதாக் கூட்டமாகையால் என்னைப் பிறகு திரும்பிக் கூடப் பாராமல் ஊரைவிட்டே ஓடி விட்டார்கள். சூதாட்டமாடி சண்டை வந்ததால், அதைப் பகிரங்கப்படுத்தி கேஸ் போடவும் கூடாது போய்விட்டது. ஆறுமாதம் ஆஸ்பத்திரியில் இருந்தும் கண்கள் போனது போனதுதான்.

குழந்தாய்! கண் இருக்கும்போது குருடனுய் அசத் மார்க்கத்தில் உழன்றேன். கானல் நீரைக் கண்டு ஏமாந்து நல்ல நீரைக் கைவிட்டேன். கண்போன பிறகு பெண்டாட்டியும் இறந்தாள். குழந்தையும் இறந்தது. உற்ரூர் பெற்ரூரும் வெறுத்தார்கள். பிச்சைக்காரனுய் ஊர் சுற்றி இந்தம்மாளின் உதவியால் உயிர் வாழுகிறேன்."

என்று கூறியதைக் கேட்டதும் லீலாவின் வயிற்றில் செய்யும் சங்கடத்தைச் சொல்லி முடியவில்லை. தன்னுடைய தந்தைதான் இந்த மனிதனைக் குருடனுக்கிய பாதகன் என்றது தெட்டென விளங்கி விட்டதும், தன் தகப்பனர் எத்தகைய பயங்கரமான கொடிய மனிதன் என்று நினைக்கும்போது அவளால் தாங்க முடியாத சித்திரவதை செய்துவிட்டது. பேசவும் வாயடைத்துவிட்டது.

அதே சமயம் அவள் தகப்பனரும் அவன் சகபாடிகளும் கும்மாளமடித்துப் பேசிக்கொண்டு வரும் சப்தத்தைக் கேட்டும், தெருக்கோடியில் வருவதைப் பார்த்தும் அவள் குடல் நடுக்கம் எடுத்துக்கொண்டது. ஐயையோ! அப்பா வந்தால் என்ன நடக்குமோ என்ற பயமும் அபாரமான திகிலும் உண்டாகி அப்படியே பதறிப் போய்விட்டாள்.

"மூன்று தலைமுறை தலைச்சன் கர்ப்பிணி தேவையா?" என்று அதிர்ச்சியினால் தம்பதிகளிருவரும் சற்றுத் திகைத்துப் போய் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்தார்கள். அந்தப் பார்வை யானது 'இது சாத்தியமான காரியமா?' என்று ஒருவரையொருவர் அபிப்பிராயம் கேட்பதுபோல் இருந்தது.

சரியான விடைகளைக் கொடுக்க அந்தச் சமயம் இருவரின் மனமும் துணியாது குழம்பியது. அதே சமயம் அந்தச் சண்டாளத் தரகன் ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை எதிரில் எண்ணி வைத்து இவர்களுடைய மனத்திலுள்ள கலவரத்தை மாற்றிவிட எண்ணி, "சார்! அம்மணி! இதோ பாருங்கள். ஒன்று! இரண்டா! பத்தாயிரம் ரூபாய் என்றால் ஒரு மனிதனின் ஜீவியத்தில் கொள்ளை யடித்தாலும் பெறமுடியாது. தெரியுமா?" என்று கூறினான்.

அச்சமயம் வீதியில் ஒரு குடுகுடுப்பாண்டி "குடுகுடுகுடுகுடு. ஐயாவுக்கு ஒரு சேதி வருது. ஐயோன்னு ஒரு சேதி வருது. ஐயோன்னு ஒரு சேதி வருது" என்று கூவியதைக்கேட்ட சாவித்திரி திடுக்கிட்டுப்போய், "ஐயோ! குடுகுடுப்பைக்காரன் அபசகுனமாய் ஏதோ உளறுகிறானே! எனக்குப் பயமாயிருக் கிறதே என்ன செய்வது?" என்று நடுக்கத்துடன் கூறினாள்.

தரகன் —(சிரித்துக் கொண்டே) அடாடா! இதற்கெல்லாமா சகுனம் பார்ப்பது? பிச்சைக்காரப் பயல்களுக்குப் போட்டால் நல்ல வார்த்தையும், போடாவிட்டால் கெட்ட வார்த்தையும் சொல் வதுதானே அவர்களின் தொழில். இந்த வீதியில் யாருமே பிச்சை போட்டிருக்கமாட்டார்கள். அதான் அவன் கத்துகிறான். வேண்டு மானால் நீங்கள் அரிசியும் ஒரு துணியும் கொண்டுவந்து போடுங்கள். உடனே நல்ல வார்த்தை சொல்லுகிறானா இல்லையா பாருங்கள். அதோடு அவன் சொல்வது இந்த வீட்டுக்குத்தான் என்று ஏன் வைத்துக்கொள்ளவேண்டும்? இத்தனை வீடுகளிருக் கிறதே! அவர்களுக்கு இருக்கக்கூடாதா! மேலும் அவன் என்ன

அத்தனை கடினமான வார்த்தை யொன்றும் சொல்லவில்லையே! 'ஐயோண்ணு சேதி' என்றுதானே சொன்னுன். இதிலென்னப் பிரமாதம்?

**முத்து** :—வாஸ்தவந்தாண்டீ! அதை எல்லாம் கவனித்தால் வீண் தொந்தரவு. இந்தக் காரியம் நம்மால் முடியுமா என்று முதலில் யோசனை செய்...என் ஐயா! கர்ப்பிணி என்ருல் அவளை என்ன செய்வார்கள்?

**தரகன்** :—அதெல்லாம் ஸ்வாமியினுடைய விஷயம். எனக்குத் தெரியாது. கர்ப்பிணியைக் கொண்டுவந்து ஸ்வாமியாரிடம் சேர்த்துவிடவேண்டும். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்.

**சாவித்** :—கர்ப்பிணியைக் கொலை செய்துவிடுவார்களா! அல்லது...

**தரகன்** :—அம்மா! இந்த விசாரமெல்லாம் நமக்கு எதற்கு? கர்ப்பிணியை அவரிடம் சேர்த்துவிட்டால், அதோடு நம் வேலை முடிந்தது. ஆனல், கர்ப்பிணி திரும்பி வரமாட்டாள். ஆகையால், அது விஷயத்தில் அகப்பட்டுக் கொள்ளாமல் வெகு ரகஸியமாக வேலை செய்யவேண்டும்.

**சாவித்** :—ஐயா! நாங்கள் இம்மாதிரி வேலை மட்டும் செய்ததே கிடையாது. எந்த வேலையோ என்று பார்த்தேன். இதற்குக் கொஞ்சம் யோசித்துத்தானே சொல்லவேண்டும். ஆகையால், நாளைக்கு வாருங்களேன்.

**தரகன்** :—சரி! நீங்கள் எந்த வேலையாயினும் செய்வதாய் அன்று வாக்களித்ததால் இந்தப் பெருந்தொகையான வருமானத்தை உங்களுக்கே கொடுக்க உத்தேசித்து ஒப்புக்கொண்டேன். இந்தக் காரியத்தில் யோசனைக்கும் மற்றென்றிற்கும் இடங் கிடையாது. வேறு யாரிடமாவது பார்த்துக்கொள்கிறேன். என் உங்கள் ரத்னசாமியே கூடச் செய்வான் என்று தெரிகிறது. அவனிடம் சென்று காரியத்தை முடித்துக்கொள்கிறேன். உம். இந்த அதிர்ஷ்ட தேவதையான பணம் யாருக்குச் சேரவேண்டுமோ அவர்களுக்குத்தானே சேரும். நான் போய் வருகிறேன்—என்று கூறிக் கொண்டே நோட்டுக்களை எடுத்து அடுக்க ஆரம்பித்தான்.

அதே சமயம் வீதியில் ஒரு பிச்சைக்காரக் கூட்டம்,

ஆனந்தக்களிப்பு மெட்டு

1. தீமைசெய்யாதிரு நெஞ்சே!—ஈசன்
நாமத்தை நம்பிநல்பணிசெய்ய அஞ்சேல்—தீமைசெய்

2. காசாசைகொண் டுழலாதே—அந்த
ஆசையே வாழ்வைஎரிக்கும் அழலாம்:

3. பக்தியினுல் சித்திதேடு—அல்ப
புத்தியினுல் வரும் புயல் போன்றக்கேடு—

என்ற பாட்டைப் பாடிக்கொண்டே போவதை இவர்கள் கேட்டு விட்டார்கள். முத்துச்சாமியின் முகம் சுளித்தது. "சோம்பேறிக் கூட்டத்தின் திமிரைப்பாரு. போதுபோகாத எந்தச் சோம்பேறிகள் இந்தப்பாட்டை எழுதிவிட்டார்களோ; அதை இந்தச் சோம்பேறிக் கழுதைகள் வேளை சமயமின்றிப் பாடிக்கொண்டே போகிருர்கள்" என்று பல்லைக்கடித்துக்கொண்டு முணுமுணுத்தான்.

**தரகன்** :—நான் சொன்னுல் கேட்கமாட்டீர்கள். பிச்சைக் காரப்பயலுக்கு வேறு என்ன தெரியும்?...சரி! நான் போய் வறேன்—என்று கூறிக்கொண்டே எழுந்தான்.

ரத்னசாமியைப் போய்ப் பார்க்கிறேன் என்று அவன் கூறிய வார்த்தைகள் தம்பதிகளின் மனத்தில் சடக்கென்று பதிந்தன. ரத்தினம் இந்தப் பெருந்தொகையைப் பெற்றுக்கொண்டு உடனே அபாரமான பணக்காரனுகி மோட்டார்கார், வைரசெட்டு நகைகள், உயர்ந்த உடைகள், பாராக்காரர்கள் முதலிய அட்ட காஸத்தில் வாழ்வதாக இவர்கள் கண்ணுக்குத் தோன்றியது.

உடனே "நம்மிடம் வந்த இந்தப் பாக்கியத்தை நாம் நிராகரித்து இதை ஓர் அன்னியனுக்கு அதிலும் உடன்பிறந்த பங்காளிக்கு விட்டுக்கொடுப்பதா?" என்ற ஓர் பொருமையும், பேராசையும் தலை தூக்கிவிட்டது. தரகன் அடுக்கியுள்ள நோட்டுகளைப் பார்த்ததும் பின்னும் மோகவெறி மண்டைக்கேறி ஆட்டத் தொடங்கியது. மீண்டும் தம்பதிகள் ஒருமுறை அபிப்பிராயத்தை அறியும் பொருட்டுப் பார்த்துக் கொண்டார்கள்,

"சரி! சம்மதம். காரியத்தில் காலை வைத்துவிடலாம்" என்று கண்கள் பேசிக்கொண்டன. உடனே சாவித்திரியே முந்திக் கொண்டு, "ஐயா! உட்காருங்கள். உட்காருங்கள். ஏதோ மூட யோசனையினால் சொல்லிவிட்டேன். நீங்கள் விரும்புகிறபடியே செய்வதில் இனி தடையே இல்லை. ஆனால், இந்தத் தொகை அந்தக் காரியத்திற்கு மிகவும் குறைவு.

ஏனெனில், மூன்று தலைமுறை தலைச்சனாக உள்ள கர்ப்பிணிகள் அகப்படுவதே கஷ்டம். அதற்கு ஊர் ஊராக அலைந்து தேடவேண் டும். இதற்கு எத்தனையோவிதமான வழியில் முயற்சி செய்தா லொழிய காரியம் சித்தியாகாது. அதற்கெல்லாம் செலவு எவ்வளவு ஆகும் நீங்களே யோசித்துப் பாருங்கள். ஒருகால் அந்தக் கர்ப்பிணி யைச் சார்ந்தவர்களுக்குப் பெருந்தொகை ஏதேனும் கொடுக்கநேர்ந் தாலும் நேரலாம். ஆகையால் செலவையும் கஷ்டத்தையும் பார்த்துக் கொடுங்கள். உங்கள் எஜமானரிடம் சிபார்சு செய்யுங்கள். இது யாருக்கும் தெரியவேண்டாம். வெகு ரகஸியமாய் இருக்கட்டும்" என்று கூறிக்கொண்டே நோட்டுக்களை வெகு ஆவலுடன் எடுத் துத் தன் கையில் அடுக்கிக்கொண்டாள்.

முத்துச்சாமியும் அவள் சொல்லியதற்குச் சலாம்போட்டுப் பல்லை இளித்தபடியே தரகனிடம் கூழைக் கும்பிடு போட்டான். தரகனும் "சரி! எனக்கு எல்லா சமாசாரமும் தெரியும். தக்கபடி பார்த்துக்கொள்கிறேன். இந்தத் தொகையைப் பெற்றுக்கொண்ட தற்கு ரசீது கொடுங்கள்" என்றான்.

உடனே தம்பதிகளிருவரும் கையொப்பமிட்டு ரசீதுகொடுத் தார்கள். தரகன் அதை வாங்கிக்கொண்டு கும்பிடுபோட்டுவிட்டுப் போய்விட்டான். கதவைத் தாளிட்டுக்கொண்டு பணத்தின் மோகத்தில் மூழ்கித் திளைந்துகொண்டிருந்தார்கள்.

அச்சமயம் "தபால்! தபால்!" என்று கூவிக்கொண்டே தபால்காரன் வந்தான். முத்துச்சாமி அலையக்குலைய நோட்டுக் களை மறைத்துக்கொண்டு மீண்டும் வெளியில்வந்து பார்த்தான். "சார்! ஒரு அணா கொடுத்து இக் கடிதத்தை வாங்கிக்கொள்ள

வேண்டும். ஒரு அணு ஒட்டுவதற்கு அரையணு ஒட்டி இருக்கிறது" என்று ஒரு கவரை நீட்டினன்.

முத்துச்சாமிக்கு ஒரு அணு என்று கூறியதுமே உயிர்போய் விட்டதுபோன்ற உணர்ச்சி உண்டாகி முகம் சுளித்தபடியே கடிதத்தைக் கையில் வாங்கிப்பார்த்தான். அதில் லீலாவின் விலாஸம் இருந்தது கண்டு வெறுப்பும் கோபமும்கொண்டு, "ஊஹூம். கடிதம் எழுதி, என்ன யாசகம் பண்ண ஆரம்பித்துவிட்டாளோ! இது அந்தக் கிழப்பிணத்தின் வேலையாகத்தான் இருக்கவேண்டும். ஒரு அணு கொடுத்து இந்தத் தண்டஎழவை வாங்கவேண்டுமா? ஒருஅணு உண்டானல் ஒருவேளைக்குச் சாமான் வாங்கலாம். இந்த சனியன் பிடித்த கடிதத்தை வாங்கவும்வேண்டாம். அதனுள்ளிருக்கும் விஷயத்தை அறியவும் வேண்டாம்" என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டே "சாவித்திரி! சாவித்திரி! இதோ பாரு! இந்தத் தண்ட எழவு கடிதத்திற்கு ஒரு அணு குடுக்க வேண்டுமாம்" என்று கடிதத்தை அவளிடம் காண்பித்தான்.

அந்தப் பேராசைப்பிடித்த பரதேவதை அதைப் பார்த்ததும் முகத்தை யொரு திருப்பு திருப்பிக்கொண்டு "போதும். லீலாவாம்! லீலா! பேரைப்பாரு. இந்தக் கடிதத்தைப் பார்க்கும்போதே அந்தக் கிழத்திற்குள்ள தரித்திரத்தின் அளவும் வேகமும் தெரியவில்லையா? தபால் தலைக்கு அரையணுவுக்கும் வக்கில்லாததால் நமக்கு ஓரணு தண்டம் வைக்கத் துணிந்திருக்கிறது. அதில் என்னவிஷயம் இருக்குமென்று நினைக்கிறீர்கள்?

"என்னை வந்து அழைத்துக்கொண்டுபோ! இல்லாவிட்டால் வருவதற்குப் பணமனுப்பு. அதுவும்இல்லை என்றால், என் செலவுக்கு ஏதாவது அனுப்பு. அதையும் விட்டால் நீதான் சற்றுப் பணக்காரனயிருக்கிருயே! லீலாவுக்குக் கல்யாணத்திற்கு ஏதாவது சகாயம் செய்" இதுபோன்ற விஷயந்தான் அதில் இருக்கும். பேசாமல் திருப்பி விடுங்கள். இந்தச் சமயம் அந்தக் கிழம் இங்கு வந்துவிட்டால், எடுத்துக்கொண்டுள்ள காரியத்தின் தலையில் மண்தான் விழும். ஆகையால் கொடுத்தனுப்புங்கள்" என்று அதிகாரம் செய்து திட்டமிட்டாள்.

இதற்குள் தபால்காரன் "என்ன சார்! நான் தபால்காரன் என்று எண்ணினீர்களா! அல்லது உங்களிடம் வட்டிக்குக் கடன் வாங்கிவிட்டு உங்கள் வாசலில் தொங்கும் கடன்காரன் என்று நினைத்தீர்களா? கடிதத்தைப் பிரித்துப் பார்த்துவிட்டு, ஒட்டிக் கொடுத்து ஏய்த்துவிடப் பார்க்கிறீர்களா! ஜாக்கிரதை. வட்டிக்கு வட்டிவாங்கி ஏழைகளை ஏமாற்றும் வித்தை இதில் முடியாது. சீக்கிரம் கொடுங்கள்" என்று சற்றுத் தனக்குச் சம்பந்தமில்லாத வார்த்தைகளையும் துணிந்து கூறினன்.

முத்துச்சாமி என்றால் எல்லோருக்கும் இத்தகைய வெறுப்பு சகஜமாக ஏற்பட்டிருந்தது. முத்து, கடிதத்தைப் பிரித்துப்பார்த்து ஒட்டிவிடவும் சளைக்காத பேர்வழியாகையால் தபால்காரன் வேண்டுமென்றே அவ்வாறு கூறி உள்ளேயும் வந்து தலையை நீட்டினன்.

முத்துச்சாமி கடிதத்தைப் பிரித்துப் படிக்கமுடியாதபடி தபால் தலையை முகப்பில் ஒட்டி இருந்ததால், அந்தக் காரியம் செய்ய முடியாது, கடிதத்தைத் திருப்பிக்கொடுத்துவிட்டான். தபால்காரனும் போய்விட்டான். தம்பதிகள் இருவரும் நோட்டுக் களை எந்த இடத்தில் பத்திரமாக வைக்கலாமென்ற விஷயத்தில் நெடுநேரம் மூழ்கிக்கிடந்தார்கள்.

நோட்டுக்களை ஒரு புதுப்பானையில் வைத்து வாயைக்கட்டி அதையோர் பித்தளைப்பாத்திரத்தில் வைத்து, அந்தப் பாத்திரத்தை வேறொரு மண்சட்டியில் வைத்து, சாவித்திரியம்மாள் படுத்துக் கொள்ளும் இடத்தில் பள்ளம்வெட்டிப் புதைத்துவிட ஆரம்பித்தார்கள்.

புருஷனும் மனைவியும் வெகு ரகஸியமாக இந்தக் கைங்கர்யத்தைச் செய்யத் துவக்கிக்கீழே பள்ளம் வெட்டினர்கள். அதே சமயம் வீதியில் ஒரு மாட்டுவண்டி வந்து நின்ற சப்தம்கேட்டது. உடனே "சாமீ! சாமீ! முத்துச்சாமி ஐயா வூடு இதுதானுங்களா!" என்று ஒருவன் கதவை தடதடவென்று தட்டினன்.

கடப்பாறையால் ஒரு இடி கீழே இடிப்பதற்குள் இம்மாதிரி அபசகுனம்போல் யாரோ கதவை இடித்ததும் இருவரும் பயந்து

போய்ப் பானேயை ஒளித்துவைக்க இடம்தேடியபடியே அவ்வறையின் ஜன்னலால் வீதியை நோக்கினர்கள்.

வண்டியை வாசல்படிக்கு நேராகத் திருப்பி இருந்ததால், அதில் தங்கம்மாள் படுத்திருக்கும் காக்ஷியைச் சாவித்திரியே முதலில் பார்த்தாள். உடனே, "ஐயையோ! காரியங் கெட்டது. வண்டியில் அந்தக்கிழப்பிணமல்லவா கிடக்கிறது. உயிர் இருக்கும் பிணமா! செத்த பிணமா! தெரியவில்லேயே! அடக் கிரகசாரமே!" என்று சாவித்திரி அலறினள். முத்துச்சாமியும் தலையில் அடித்துக்கொண்டான். இதற்குள், பட்டிக்காடாகையால் வீதியில் வண்டியைச் சுற்றிக் கும்பல் கூடிவிட்டது. வண்டிக்காரனின் இரைச்சலும் அதிகமாகிவிட்டது. இதைக் கண்டு உள்ளிருக்கும் இருவரும் என்ன செய்வதென்று அறியாது திகைத்தார்கள்.


# மாயப்ரபஞ்சம்

மாயப்ரபஞ்சத்தின் மகிமையான கருத்தென்ன? அதன் முடிவு என்ன? சௌதாமினியின் வாழ்க்கையிலுள்ள மர்மம் யாது? சன்யாசினியின் அதியற்புதமான சரிதையின் சாரம் என்ன? பொருமைப் பேய்களின் விஷமச் செயல்களும் அவற்றின் விளேவும் என்ன? சௌதாமினியும் ஹரிநாத்தும் கொண்ட பவித்ரமான காதலின் முடிவு என்ன?...அக்ரமக்காரர்களின் அதிசயச் செயல்களும், திடுக்கிடும் பயங்கர சம்பவங்களும் மனத்தைப் பரவசமுறச் செய்யும் மனித வாழ்க்கையின் சித்திரங்களும் நிறைந்த நாவல்.

ரூ. 1. சந்தாநேயர்களுக்கு, அணு. 14.

# 11

"அம்மா! உன் மகளை மனம் துணிந்து ஸினிமாக்காரனுடன் தனியாக அனுப்பும்போது ஒரு மன அதிர்ச்சியும் காணோம். இப்போது ஆபத்து என்னும்போது இந்த மூர்ச்சை எதற்காக? எழுந்திரு" என்று வெறுப்புடன் கூறிக்கொண்டே கோபி மரகதத்தைத் தூக்கி உட்காரவைத்தான். மரகதம் என்ன பேசுவது, என்ன செய்வது என்று ஒன்றுமே தெரியாது தத்தளிக்கின்றாள். 'கோபி!' என்று ஏதோ பேச வாயெடுக்கின்றாள். ஆனால் பேச்சு வராமல் தொண்டையில் ஏதோ பெரிய பாறையைப்போல் அடைத்துத் தடுக்கின்றது. கோபியின் ஆத்திரமும் அவமானமுமோ சொல்லமுடியவில்லை. பல்லைக் கடித்துக்கொண்டு, "அம்மா! உண்மையில் பார்வதி, லீலா வீட்டிற்கா போயிருக்கிறாள்? இனியும் அப்படிச் சொல்லத் துணிந்திருக்கிறாயா! உன் புத்தி ஏன் இப்படி கெட்டுவிட்டது?

ஏற்கெனவே நம் குடும்பத்திற்கு ஏற்பட்டுள்ள அவமானமும் இழுக்கும் இந்தத் தலைமுறைக்கு மறையாது தவிக்கையில் இந்த அவமானத்தையுமா நீ தேடி வைத்துவிட்டாய்? ஐயோ! ஆணாகிய எனக்கு இருக்கும் மான அவமானங்கூட பெண்மகளாகிய உனக்கேன் இல்லாது போய்விட்டது?

வெளியில் தலை நீட்டினால், "அதோ போகிற பையன் யார் தெரியுமா! அதான் சர்க்கார் உத்தியோகத்தில் லஞ்சம் வாங்கிவிட்டு, கடுந் தண்டனை அடைந்து ஜெயிலிலிருக்கும் ஆசாமியின் மகன்" என்று கூறும்போது, தேகம் பதைத்து அவமானத்தினால் குன்றிப்போகிறது. அந்த ஒரு பட்டம் போதாமல், "அதாண்டா! அந்த ஸினிமாக்காரி சுகுணா இல்லை! அவளுடைய அண்ணன்" என்ற பட்டத்தையும் கூசாது வாங்கி வைத்துவிட்டாயே! இந்தப் படு குழியில் விழுந்தது யாருடைய போதனையினால் என்பதை ஒளிக்காமல் சொல்லப்போகிறாயா இல்லையா? இந்த வெட்கக்கேடு அப்பாவுக்கும் தெரியுமா! அவரையும் என்னைப்போல் ஏமாற்றிவிட்

டாயா ! அல்லது அவர் புத்தியும் உன்னைப்போல் கெட்டுவிட்டதா ! சொல்லு. இந்த மாய ஜாலம் எல்லாம் வேண்டாம்" என்று கண்கள் சிவக்கக் கோபத்துடன் கேட்டான்.

மரகதம், என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் முதலில் நடுங்கினாள். பிறகு சற்றுத் தைரியப்படுத்திக்கொண்டு, "கோபீ! பெத்த தாயார் என்கிற முறையில் நீ சற்று நிதானமாகப் பேசு. நீ கேட்பதற்கெல்லாம் பிறகு பதில் சொல்கிறேன். குழந்தைக்கு என்ன ஆபத்தோ அது என் வயிற்றைக் கலக்குகிறது. முதலில் அங்கு சென்று பார்த்து வந்தால்தான் மனது சமாதானமடையும். இப்போது என்னைத் தொந்தரவு செய்யாதே...நான் அங்கே போகவேண்டும்.

கோபி :—என்ன ! போகவேண்டுமா ? பெத்த தாய் என்கிற முறையில் பேசாதிருக்கவேண்டுமா ! அம்மா ! பெத்த தாய் என்ற ஒரு பந்தமிருப்பதால்தான் நான் உன்னெதிரில் நிற்கவாவது நின்று பேசுகிறேன். இல்லையேல், இந்த இடத்தை மிதிப்பதற்குக்கூட எனக்கு அவசியமில்லை. பெத்த தாயாயினும், தான் பெற்ற மக்களாயினும் தீய வழியில் போவதானால் அவர்களைக் கண்டித்து நல்வழிப் படச் செய்யவேண்டுவது ஒவ்வொருவரின் கடமை. அதையும் அறிந்து கொள்ளு. பார்வதி உண்மையில் செத்துப்போய்விட்டால் கூட நான் சந்தோஷமே படுவேன். அவளை நீ இப்படி உயிருடன் குட்டிச்சுவரடித்துவிட்டதானது தீராத விசனத்தையும் அவமானத்தையும் உண்டாக்கிவிட்டது. நீயாவது, இனி அங்கு போவதாவது ? காலை எடுத்தும் வைக்கக்கூடாது. அவளுக்கு எந்த விபத்தும் வந்துவிடாது. விஷயத்தை முதலில் சொல்லு. உன்னையும் அப் பெண்ணையும் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிய பாவிகள் யார் ?" என்று கர்ஜனை செய்தான்.

என்ன செய்வாள் பாவம்! பேந்தப் பேந்த விழித்தவாறு, "அப்பா ! கோபீ ! ஆத்திரப்படாதே. அப்பாவோ ஜெயிலிலிருக்கிறார். வீட்டிலோ சம்சாரம் பெரிது. நீ படிக்கப் பட்டணம் போய்விட்டாய். எத்தனை நாளைக்குத்தான் கஷ்ட ஜீவனம் செய்து இந்தப் பாழுங் குடித்தனத்தைக் காப்பது ? பிழைத்த கௌரவத்

திற்குப் பங்கம் வந்ததால் உடன்பிறந்தோர்களும் கைவிட்டார்கள். வேலைக்காரியாய் வீடுகளில் சமயல் செய்யவும் நான் கிளம்பி னேன். இது நீ அறியாததன்று.

கோபி இடைமறுத்து, "சரி! இந்தப் பழங்கதைகள் எதற்கு? கௌரவமான முறையில் உன் கையை உழைத்து உன் குழந்தை களுக்கு நீ கஞ்சி வார்த்து வந்த கண்ணியம் எப்படிக் குலைந்தது என்றுதான் இப்போது கேட்கிறேன். சொல்லு" என்றான்.

மரகத:—நான் சமயல் செய்யும் வீட்டில் சினிமாப் பத்திரி கைகள் நிறைய வரவழைத்து வந்தார்கள். அதை நானும் பார் வதியும் படித்து வந்தோம். அந்த வீட்டிற்குச் சினிமாக் கம்பெனி முதலாளியொருவர் விருந்தாளியாய் வந்திருந்தார். அவர் சினிமா வைப்பற்றி வீட்டுக்காரர்களுடன் பேசுவதை எல்லாம் கேட்டுக் கேட்டு என் மனத்திற்குச் சற்று அவ்விஷயத்தில் சபலம் உண்டா யிற்று.

அதோடு அவர் நம் பார்வதியைப் பார்த்துவிட்டு, "இந்தப் பெண் வெகு ஜோராயிருக்கிறாளே! இவள் நடித்தால் படம் வெகு நன்றாயிருக்குமே! சரியானபடி பணமும் கொடுத்து ஆதரவும் கொடுக்கிறேன்" என்று வீட்டுக்காரம்மாவிடம் தெரிவித்தாராம்.

"இந்தக் காலத்தில்தான் எத்தனையோ பேர்கள் சினிமாவில் ஆடுகிறார்கள். படித்தவர்களும் குடும்பத்திலிருப்பவர்களும் தாராள மாய் நடிக்கிறார்களே! இதில் என்ன குற்றம். உன் குடும்பத் துக்கும் ஆதரவாயிருக்கும். கஷ்டம் விடியும்" என்றெல்லாம் வெகு உத்ஸாகமாய்க் கூறினார்கள்.

பார்வதிக்கும் ஆவல் அதிகமாய்விட்டது. எனக்கும் அது மிகவும் மனத்திற்குப் பிடித்துவிட்டது. சினிமாவில் நடித்த இரண் டொரு பெண்மணிகளைக் கேட்டேன். அவர்களும் வெகுவாய்ப் புகழ்ந்து சினிமாவைப்பற்றிப் பேசியதோடு இதே சினிமாவில் தாங்களும் நடிக்கப் போவதாயும் தைரியங் கூறினார்கள்.

உன்னைக் கேட்கப் பயமாயிருந்தது. அப்பாவுக்கு இவை களைக் கடிதத்தில் எழுதவும் முடியாது அதோடு அச் சினிமாக்

காரனே பார்வதிக்குச் சரியான இடம் பார்த்து விவாகத்தையும் செய்து வைப்பதாய்க் கூறினன். என் கஷ்டத்தை உத்தேசித்து நான் இசைந்துவிட்டேன். சினிமாவில் நடிப்பதில் என்ன குற்றம்? எத்தனையோ புகழும் மேன்மையும் பணமும் கிடைக்கிறதென்று தான் மாமியும் கோமளாவுங்கூடச் சேர்ந்திருக்கிறார்கள். அதனால் தான் நானும் சேர்த்துவிட்டேன். தட்டாது தளராது 1000 ரூபாயை ரொக்கமாய் அட்வான்ஸாகக் கொடுத்துவிட்டான்.

குழந்தைக்குப் பல தினுசு புடவைகள் நகைகள் எல்லாம் செய்து போடுகிறானும். நம்ப மாமியின் மகள் கோமளியும் இவளும் ஒன்றாக அக்கா தங்கையாய் நடிக்கப்போகிறார்கள். இதி லென்ன குற்றம்?—என்று கீழ் ஸ்தாயியில் ஆரம்பித்துச் சற்று ஏற ஏற ஸ்வரம் மேல் ஸ்தாயி சட்ஜமத்தில் பேச ஆரம்பித்தது.

தலைவிதியை எண்ணி இந்தக் கதைகளைக் கேட்டுக்கொண் டிருக்கும் கோபியின் உள்ளம் கொதிக்கின்றது. ஆத்திரம் பொங்கு கிறது. மரகதத்தின் ஸ்வரம் ஏறிக்கொண்டு வருவதிலிருந்து அவள் செய்தது மிகவும் நியாயம், நன்மை என்கிற சித்தாந்தத்தை ஊர் ஜிதப்படுத்திப் பேசுகிறாள் என்பது நன்றாகத் தெரிந்துவிட்டது. அதற்குமேல் அவனால் பொறுக்கமுடியவில்லை. "போதும், நிறுத்து. உன் பெருமை புராணத்தைக் கேட்டு மனம்வெடிப்பது போதும்.

புத்திசாலிகளாக விருப்பின் ஒரே வார்த்தையில் அதன் நன் மையை அறியலாம். உனக்குச் சிபார்சு செய்த அந்தம்மாளுக்குப் பேத்தி இருக்கிறதே. இது உயர்ந்த ஸாதனமாயின், குற்றமற்ற தாயின் அதை ஏன் சேர்க்கக்கூடாது. இதிலிருந்தே நீ ஏன் தெரிந்துகொள்ளவில்லை? சினிமாவுக்கு இருப்பிடமானதும், பேர் பிரஸித்தமானதுமான மேல்நாடுகளிலேயே அதன் விபரீதங்களைச் சகிக்காது அடிக்கடி பத்திரிகைகளில் வெளியிடுகிறார்கள். நடிகை களும் நடிகர்களும் அதிலுள்ள அநியாயங்களைச் சொல்கிறார்கள். அங்ஙனமிருக்க இந்நாட்டில் கேட்கவேண்டுமா!

அந்தச் சாதனம் உண்மையில் எத்தனையோ உயர்ந்ததுதான். உயர்ந்த நோக்கத்துடனும், ஒழுங்கு தவறாமலும் அதை விருத்தி செய்திருந்தால் ஒரு ஆக்ஷேபனைக்கும் இடமில்லைதான். ஆனால்,

ஏதோ ஒன்றிரண்டு முதலாளிகள், சில நடிக நடிகைகள் அதில் சம்பந்தப்பட்ட பின்னும் சிலரைத்தவிர அந்த ஸ்தாபனமே அடியோடு பாழான நிலைமையில் சிதறிக் கொண்டிருக்கும் பரிதாபத்தை வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்கும் நீயா அறிவாய்?

எத்தனை சினிமாக் கம்பெனிகளின் ஊழல் திருவிளையாடல்கள் சந்தி சிரித்து நீதிஸ்தலம் வரையில் எட்டி இருக்கிறது உனக்குத் தெரியுமா! எத்தனை விஷயங்கள் இதுபற்றிப் பத்திரிகையில் வருகின்றன தெரியுமா!

இன்னும் கேட்கப்போனால் அழகிய யௌவனப் பருவ மங்கையர்களை வேட்டையாடும்பொருட்டே சிலர், இந்தத் துறையில் இறங்கி இருக்கிறார்கள் என்று அதில் அனுபவப்பட்ட அநேக பெரியவர்கள் தாராளமாய்க் கூறுகிறார்கள்.

முதலில் ஏமாந்துபோய் படத்தில் நடிப்பதற்கு ஒப்புக் கொண்டு சென்று, பிறகு அந்த இடத்தில் அவர்களுக்கு நேர்ந்த பலவிதமான தீமைகளைச் சகிக்காது பாழாகிய நடிகைகளின் பிரலாபத்தை நான் நேரில் பார்த்திருக்கிறேன். அந்தச் சீர்கேட்டை அவர்களுடைய வாயினாலேயே கூறக் கேட்டும் இருக்கிறேன்.

நல்ல முறையில் இது ஓர் உன்னதமான கலை என்ற சாதனத்துடன் இத்தொழில்நடக்குமாயின் அப்பழுக்கற்ற முறையில் அதில் சம்பந்தப்பட்ட யாவரும் நடப்பார்களாயின் ஏதோ ஒருவாறு ஒப்புக்கொள்ளலாம். இந்தச் சாதனந்தான் தினேதினே பாழ்குழியில் வீழ்ந்து பரிதவிக்கும் நிலைமையில் வந்துகொண்டிருப்பதை உலகம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறிந்துகொண்டிருக்கிற சமயம் பரிசுத்தமாம்; குற்றமில்லையாம். உன் குடும்பத்தைக் காப்பாற்றுகிறானும். கல்யாணமும் செய்து வைக்கிறானும். அடாடாடா! என்ன நயவஞ்சகம்!

இவைகளெல்லாம் உன் சொப்பனத்திலும் நடக்காத காரியம் என்பதை இனியாவது நம்பு. இந்த ஊழல் தெரியாது காலிட்டுக் கொண்ட உனக்கு இதிலுள்ள அத்தனை விபரீதங்களையும் நேருக்கு நேர் விளக்கிக்காட்டிவிட நான் கங்கணங் கட்டிக்கொள்கிறேன். ஒந்த மோகத்தில்தான் நீ பெண் குழந்தைகளின் தலையை இப்

படிப்பாப்செய்துபாழாக்கிவிட்டயா! ஐயோ! இந்தக்கண்ருவியைச் சகிக்கமுடியவில்லே. பார்வதியின்வாழ்க்கையைப் பெத்த தாயாகிய நீயே பாழடித்துவிட்டதோடு, குடும்பத்திற்கும் அழியாத இழுக்கைத் தேடிவிட்டாய்'' என்று தலேயில் அடித்துக்கொண்டான்.

மரக:—கோபி! நானும் அப்போது முதல் பார்க்கிறேன். நீ சரமாரியாக ஏதேதோ சொல்லி என்னைக் கலக்குகிருயே! அம்மாதிரி நீ நினைப்பது சுத்தத்தவறு. எத்தனையோ குடும்பத்துப் பெண்களெல்லாம் ஸினிமாவில் ஆடுகிருர்கள் என்பதை மறந்து பேசுகிருயே! ஒருவிதமான இழிவுமே இல்லேயாம். என் வீண் காபுரா செய்கிருய்?

கோபி:—ஓகோ! குதிரைசெத்ததுமல்லாமல் குழிதோண்டக் கால் பணம் கேட்ட கதையைப்போல் நீ கண்மூடித்தனமாய்க் கெட்டது போதாமல் இப்படி என்னையே பழிக்கிருயா! இருக்கட்டும். நீ ஏமாந்தது நிஜமா, நான் சொல்வது நிஜமா என்பதை விளக்கி விடுகிறேன். இரு. உம். இப்போதே என்னுடன் புறப்படு.—என்று பெருத்த அட்டகாஸத்துடன் கூறினன். மரகதத்திற்கு உண்மையில் இடுப்பு உடைந்துவிட்டது. மார்பு படபடவென்று அடித்துக் கொள்கின்றது. தலேக்கு மீறிய பிள்ளேயுடன் எப்படி எதிர்த்து வாதாடுவது என்ற பயம் ஒரு புறம் பாதிக்கிறது. சற்று நடுங்கியபடியே, "கோபீ!" என்று கூப்பிடுவதற்குள், கோபி சிள்ளென்று சீறி விழுந்தபடியே, "கோபியும் இல்லே. காபியும் இல்லே. உம். புறப்படு; இனி நிற்க முடியாது. நான் இப்போதே சொல்கிறேன். நான் சொல்கிறபடியெல்லாம் கேட்டுக்கொண்டு வாய் திறக்காமல் வரவேண்டும். உம். நேரமாகிறது'' என்று அதட்டினன்.

அடுத்த நிமிடம் ஒரு வண்டி கொண்டுவந்தான். குழந்தைகளே வேலேக்காரியிடம் ஒப்புவித்துவிட்டுத் தாயாருடன் வண்டியில் ஏறிக் கொண்டு சென்ருன்.

ஒரு குறித்த இடத்திற்கு மாலே 5 மணிக்குச் சென்ருர்கள். கோபி மரகதத்தை அழைத்துக்கொண்டு ஒரு வீட்டிற்குள் நுழைந்தான். அங்கு படி ஏறும்போதே பெருத்த பேச்சுக் குரலும்

அமர்க்களமும், பாட்டுச் சப்தமுமாய் இருந்தது. உள்ளே வசவச வென்று பல பேர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களில் இளம் பிராயத்து யௌவனப் பெண்களும் இருந்தார்கள்.

வெற்றிலைப்பாக்கை மென்றுகொண்டே மத்தியில் ஓர் ஆள் திண்டில் சாய்ந்துகொண்டிருந்தான். ஒரு பெண் பாடிக்கொண் டிருந்தாள். பாதி பாட்டில் அந்தப் பெண்ணைப் பாட்டை நிறுத்தச் செய்துவிட்டு, வெத்திலைத் தம்பலத்தை அங்குள்ள கிண்ணியில் உமிழ்ந்து, பின்னர், "ஓய்! உமது மகள் பாட்டுக்கும் லாயக்கில்லை. நடிப்பிற்கும் லாயக்கில்லை. ஒன்றுக்கும் உபயோகமற்ற பெண்ணை நாங்கள் பேசி என்ன செய்வது? எழுந்து போகலாம்" என்று சற்றுத் துடுக்காயும், விபரீதமான பொருள் படும்படியாயும் கூறினன்.

அதற்கு அந்தப் பெண்ணின் தகப்பனர் 32 பல்லையும் இளித் துக்கொண்டு, "ஐயா! அப்படிச் சொல்லிவிடக்கூடாது. இப் போது ஏதாவது சகிவேடம் கொடுத்தால் கொஞ்சங் கொஞ்சமாய் ராணிபார்ட்டுக்குத் தயாராகிவிடுவாள். நாங்கள் மகா ஏழைகள். குழந்தைக்குப் பெருந்தொகை யொன்றும் கொடுக்கவேண்டாம். மாதம் 10 ரூபாய் சம்பளங் கொடுத்தாலும் போதும். தயவு செய்யவேண்டும்" என்று கெஞ்சினன்.

**முதலாளி**:—போமய்யா! போம். 10 ரூபாய் என்றது சும்மா காய்த்துத் தொங்குகிறதா! படே படே ஆஸாமிகளெல்லாம் எங்க காலடியில் சும்மா உழைக்கக் காத்திருக்கையில் எலிக்குஞ்சு போன்ற உங்க பெண்ணைப் பற்றிப் பிரமாதமாய்ப் பேசுகிறீரே! அழகாவது இருக்கிறதா! அதுவும் பூஜ்யம். போமய்யா! போம்.— என்று வெகு அலக்ஷியமாகக் கூறினன்.

மறுபேச்சின்றி பெண்ணுந் தகப்பனும் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு நகர்ந்தார்கள். இந்தக் கண்ராவி காட்சியைப் பார்த்த கோபி, மனத்திற்குள்ளெழுந்தவெடித்துவிடும்போன்ற ஆத் திரத்தை அடக்கிக்கொண்டு நிற்கிறுன். மரகதமும் இதைப் பார்த்து பிரமித்துப் போய்விட்டாள்.

இதைப்போன்று இன்னும் பலர் அந்த முதலாளியிடம் கெஞ்சிக்கூத்தாடுவதும் அவன் அலக்ஷியமாயும் துச்சமாயும் பேசுவதும் ஒரு பரிதாபக் காக்ஷியா யிருந்தது. இப்படியுமா மக்களின் மதி அழிந்துவிட வேண்டும். தம்முடைய கௌரவம் தமக்குத் தெரியாதுபோய், தாம் பெற்ற அருமைக் குழந்தைகளை இப்படியா மானமின்றி விற்பதற்கு ஒப்ப வந்து பல்லை இளிக்கவேண்டும். ஐயோ! வெட்கக்கேடே! இப்படி தன் சுயமதிப்பற்றுப் பிழைக்க வழி தேடுவதைவிட குழந்தைகளைக் கிணத்தில் நல்லதங்காளைப்போல் தள்ளிவிட்டு நிம்மதியாய் மானத்துடன் வாழலாமே என்று கோபியின் மனத்திற்குள் எண்ணி குமுறினான்.

அந்த முதலாளி, கோபியைப் பார்த்ததும் "நீ யாரப்பா! என்ன சமாசாரம்?" என்று கேட்டான்.

**கோபி**:—ஐயா! எனக்குக் கொஞ்சம் பாடத் தெரியும். இந்தம்மாளும் பாடுவார்கள். எங்களுக்கு ஏதாவது ஒரு நடிப்புக் கொடுத்தால் மிகவும் உதவியாயிருக்கும். நீங்கள் ஏதோ புதிய படமெடுப்பதாகக் கேள்விப்பட்டேன்.

**முதலாளி**:—அப்பப்ப! தலைவேதனையைச் சகிக்க முடியவில்லை. முன்பெல்லாம் ஒரு படத்திற்கு ஆள் தேடிப் பிடிப்பதற்குள் எங்கள் குடல் அறுந்துவிடும். இப்போதோ இந்தமாதிரி கூட்டத்தை விலக்குவதற்குள் போதும் போதும் என்று ஆய்விடுகிறது. நீ என்ன நடிப்பாய்? இந்தம்மாள் என்ன நடிப்பாள்? முகத்தைப் பார்த்தால் கிழடு தட்டுகிறதே! இவர்களா நடிக்கப் போகிறார்கள்!

**கோபி**:—நீங்கள் எந்த பார்டு கொடுத்தாலும் நடிப்போம்.

**முதலாளி**:—சரி! நீ மட்டும் நாளைக்கு வா! இந்தம்மாளுக்கு இங்கு ஒன்றும் இல்லை. எங்கள் படத்தில் வயதான பெரியம்மாக்களுக்கு ஆள் ஏற்கெனவே பொருக்கியாய்விட்டது. இந்தக் கிழவிக்கு இங்கு...என்று அவன் அசம்பாவிதமாயும் துணிச்சலுடனும் கூறி முடிப்பதற்குள், கோபிக்குத் தாங்க முடியாத கோபம் மிஞ்சிவிட்டது.

அவன் பதட்டத்துடன் "ஆமய்யா! ஆமாம். நீங்கள் யௌவனப் பருவத்து மங்கை வேட்டைக்காரர்கள்தானே! இவர்களுக்கு என்ன வேலை யிருக்கும்? அது வாஸ்தவந்தான்" என்று கூறிவிட்டுத் தாயின் கையைத் தர தரவென்று பிடித்து இழுத்துக்கொண்டு வீதிக்கு வந்தான். "அம்மா! பார்த்தாயா! அந்தத் தடிக் கம்னுட்டி சோதாப் பையன் பேசிய பேச்சின் ச்லேடை உன் மேதாவி மூளைக்கு எட்டியதா! இன்னமும் உனக்குச் சந்தேகமானல் இரு; அதையும் விளக்குகிறேன். உன் மதியிழந்த நிலைமையில் நீ வீணுக பார்வதியைப் பாழாக்கிவிட்டாய் என்பதை இனியாவது நினைத்துப் பார்ப்பாயா?" என்று திட்டியவாறு, வேறு இடத்திற்குச் செல்ல வாரம்பித்தான். தான் கண்ட, கேட்ட-காட்சிகளிலிருந்து மரகதத்தின் இதய வேகத்தை அவளால் சகிக்க முடியவில்லை. தலை சுற்றுகிறது. பதுமைபோல் வண்டியில் மௌனமாக அவனுடன் செல்லலானுள்.


# சாந்த குமாரி

"வாழ்வாவது மாயம் மண்ணுவது திண்ணம்" என்னும் ஜீவிய ரகஸியத்தை நன்கு எடுத்துக் காட்டும் நவீனம். தற்கால வாழ்க்கையின் உன்னத சித்திரம்...... உலக விநோதம்......க்ரோதப் புயலும், காதற் சுழலும் ......கோபத்திற்கு முன் பாபமுமுண்டோ?......சண்டாளச் செய்கையின் சங்கட விளைவுகள்......அன்பின் வேகம் ஆற்றையும் கடக்கும்......பிரேமையின் ஜோதி ......முற்றும் வியக்கும் சரிதை......உயரிய படக்காட்சிக்கு உகந்த நாவல். பல பாஷைகளில் மொழி பெயர்த்துப் புத்தகமாகவும், படமாகவும் வெளிவரத் தகுந்த இணையிலாக் கதைப் போக்கு. தமிழர் பெருமை படக் கூடிய புத்தகம்.

விலை ரூ. 1. சந்தா நேயர்களுக்கு அணு 14.

# 12

வீதியில் வண்டியுடன் கிடக்கும் தங்கம்மாளைக் கண்டதும் அக்கம் பக்கம் உள்ளவர்கள் கூட்டம் கூடி வண்டியைச் சுற்றிக் கொண்டு, "ஐயையோ! தங்கம்மா! உனக்கென்னடியம்மா வந்து விட்டது? இதென்ன கோராமையடியம்மா! அடே முத்துச்சாமீ! ஒங்கம்மாளின் பரிதாபத்தைப் பாருடா! கதவைத் திறடா!" என்று சில பாட்டிமார்கள் கத்தினர்கள்.

உள்ளேயிருக்கும் தம்பதிகளுக்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லை. பல்லைக் கடிக்கிறார்கள். இந்த நிலைமையைப் பிறர் பார்த்து விடப்போகிறார்களே என்ற பயம் ஒருபுறம், கிழவி சனியன்போல் வந்துவிட்டாளே என்ற ஆத்திரமும் அருவருப்பும் ஒருபுறம் பாதிக் கையில், பாத்திரத்துடன் அப்படியும் இப்படியும் தாண்டவமாடு கிறார்கள்! "என்ன செய்வது?" என்று ஒரு நிமிடம் சாவித்திரி யோசனை செய்தாள்.

சட்டியில் அடக்கம் செய்திருந்த நோட்டுக்களை எல்லாம் ஒரு துணியில் முடிந்து சாவித்திரி மடியில் கட்டிக்கொண்டு, மஞ்சளையும் சுண்ணும்பையும் குழைத்து, முகம் தலை முற்றிலும் பூசிக்கொண்டு பெரிய கம்பளிக்குள் மறைந்து பள்ளம் வெட்டுமிடத்தில் படுத்துக் கொண்டாள். இந்த ரகஸியத்தை அறியாதிருக்கும் பொருட்டுப் பசங்களை வேறு உள்ளே வைத்துப் பூட்டியிருந்தார்கள். அவர்களை வெளியில்விட்டு அம்மாவைச் சுற்றி உட்கார்ந்து இரைச்சலிட்டு அழும்படியாகக் கூறிப் பின், மற்றவைகளை எடுத்து ஏறக் கட்டி விட்டு, முத்துச்சாமி வாசலில் வந்து "வைத்தியர் வந்துவிட்டாரா! மருந்து வந்ததா? எங்கம்மாவுக்கு ஆள் அனுப்பக்கூட எனக்கு திக் கில்லையே! ஐயோ! நான் என்ன செய்வேன்? என் குடி முழுகிவிடும் போலிருக்கிறதே!" என்று கத்தியபடியே கையை உதறிக்கொண்டு அப்போதுதான் அவ் வண்டியைப் பார்ப்பதுபோல் பார்த்து, திடுக் கிட்டமாதிரி நடித்து, "ஐயையோ! வண்டியில் யாரு? இதென்ன கூட்டம்?" என்று ஓர் பெரிய பொய் மூட்டையை அவிழ்த்தான்.

அக்கம் பக்கம் கூடியவர்கள் இவனுடைய பதட்டத்தை யறிந்து பிரமித்துப்போய், என்ன! என்ன! முத்து! என்ன விசேஷம்? வீட்டில் யாருக்கென்ன உடம்பு? உன் தாயாரல்லவா வண்டியில் வந்திருப்பது, உனக்குத் தெரியவில்லையா! அவள் தேக மாத்யந்தம் ஒரே காயமா யிருக்கிறதே! என்ன விபத்தோ தெரிய வில்லையே!" என்று கூறினர்கள்.

முத்துச்சாமி வண்டியருகில் வந்து பார்த்தான். ரத்தம் உலர்ந்து போயும், ரத்தக் கிளறியாயும், வீங்கியும் பலவிதமாய் இருப்பதைக் கண்ட முத்துச்சாமி, "அம்மா! அம்மா! இதென்ன சங்கடம்? ஏண்டாப்பா வண்டிக்காரா! என்னடா சமாசாரம்" என்று வெகு கனிகரம் வழிந்தோடுவதுபோல் கேட்டான்.

**வண்டி** :—சாமீ! எனக்கு ஒண்ணுந் தெரியாதுங்க. அம்மா கோயிலுக்குத் திருநாள் பாக்க வந்தாப்பலெ தெரியுது. யாரோ சோதாக்களுக்கும் சினிமாக்காரர்களுக்கும் சண்டை வந்து பெரிய அடிதடிஆயிபூட்டுதுங்களாம். அதுலே எத்தினியோ பேருக்குப் பலமான அடிங்களாம். காலு, கையி, கண்ணு, அல்லாம் பூட்டு துங்களாம். பெரிய அமக்களமுண்ணு பேசிக்கிறாங்க. யாரோ ஒரு பெரியவருக்கு இந்தம்மாளெ தெரியுமாம். ஓங்க விலாசத்தைக் கொடுத்து இங்கே ஜாக்கிரதையா கொண்டு வுட்டுட்டு வரச்சொன் னுங்க. ஐயோ பாவம்! பெரியம்மாளாச்சே! சாமி பாக்கவந்த வெடத்துலே இப்பிடி ஆயிபூடுத்துங்களே! கெய ப்ராணன் ஒரு வேளே பூட்டுதுங்கண்ணாலும் பெத்த புள்ளெ மடிமேலே போனு திருத்தியா போவுமேண்ணு நெனச்சி நான் ஒப்புக்கினு வந்தேன். எங்கம்மாளெ பாக்கருபேலெ இந்தம்மாளெ பாக்கச்செலெ இருந்து துங்க. எறக்கி உள்ளாரக் கொண்டு போங்க. எனக்கு 5 ரூபா வண்டி சத்தங்க" என்று மூச்சுவிடாது கூறினன்.

தபால்காரனுக்கு ஒரு அணு கொடுக்க வேண்டுமென்று சொல்லியபோதே உயிர் போனதுபோல் தோன்றிய முத்துச் சாமிக்கு 5 ரூபாய் என்றவுடன் உயிர் நிற்குமா! தாயாரைப்பற்றிக் கூறிய தகவல் ஒன்றுமே காதில் விழவில்லை. 5 ரூபாய் என்ற வார்த்தைதான் ஒரு பூகம்பம் ஆட்டுவதுபோல் அவன் உயிரை ஆட்டியது.

" உடனே முகம் சுருங்கிச் சிவந்தது. பாழாப்போன கோயில் கோயில் என்று அடித்துக்கொண்டு ஓடுவதன் பலன் இதுதான். சாகிற காலத்தில் பேசாமல் வீட்டோடு கிடக்காமல் பிரவர்த்தகம் அதிகமாகிவிட்டால் என்ன செய்வது ? வீட்டில் என் மனைவியோ சாகக் கிடக்கிறாள். நான் அவளைப் பார்ப்பேனா ! இவளைப் பார்ப்பேனா ! என்ன செய்வேன் ?'' என்று கர்ஜித்தான்.

தங்கம்மாளுக்கென்னவோ கொஞ்சம் உள் ஞாபகம் இருக்கிறதால், இவர்கள் கூறிய வார்த்தைகள் காதில் கேட்காமலில்லை. ஆனால், வாய்திறந்து பேசக்கூட முடியாது அத்தனை கேவலமான நிலைமையில் அவள் இருந்தாள். கண்ணீர் தாரை தாரையாகக் பெருகுகிறது.

இதற்குள் அக்கம்பக்கம் இருப்பவர்கள் உள்ளே புகுந்து பார்த்தார்கள். சாவித்திரியின் அலங்கோலமான படுக்கையும் அவளைச் சுற்றிக் குழந்தைகள் உட்கார்ந்து கதறுவதும் அவர்களைப் பிரமிக்கச் செய்தன. "கிழவியும் சாகக் கிடக்கிறாள். இவளும் இப்படி கிடக்கிறாளே என்ன செய்வது ? இவனோ மகா லோபி. கர்மி. என்ன செய்வான் " என்கிற கலக்கம் அவர்களுக்கு உதித்தது.

இதற்குள் முத்துச்சாமி " அப்பா ! வண்டிக்காரா ! உனக்கு 5 ரூபாயில்லை, 10 ரூபாய் வேண்டுமானாலும் கொடுத்துவிடுகிறேன். வீட்டில் என் சம்சாரம் சாகக் கிடக்கிறாள். அந்த நிலைமையில் இவளுக்குச் செய்பவர்கள் யாருமே இல்லை. இதோ 8 மைலுக்கு அப்பாலிருக்கும் ராதாபுரத்து ஆஸ்பத்திரியில் நீ எனக்காக இந்தம்மாளைக் கொண்டுபோய் விட்டுவிடு. நான் பிறகு கவனித்துக் கொள்கிறேன். ஒரு கடிதம் தருகிறேன். அதையும் அவர்களிடம் கொடுத்துவிடு " என்று கூறி, ஒரு கடிதத்தையும் எழுதிக் கொடுத்தான்.

பக்கத்திலிருந்த அடுத்தவீட்டுக் கிழவி "ஏண்டாப்பா ! முத்து ! பெத்த தாயாராச்சே ஒரு வேளை செத்துப்போய்விட்டால் அவள் உன் வீட்டிலேயே உன் மடியில் செத்தால் எத்தனையோ புண்ணிய மாச்சேடாப்பா ! அவள் நல்ல ஆத்மா ! வீணாக ஆஸ்பத்திரியில்

போய் என் அனுசாரத்தில் சாகவேண்டும்? ஏதோ நாங்கள் எல்லாம் இருக்கிறோம். பாத்துக்கொள்கிறோம். உன் தங்கையையும் தம்பியையும் வரவழைத்துவிடு. கிழவி செத்தாலும் நல்லதாயிற்று. பிழைத்தாலும் அவள் ஆத்மா திருப்தியாகிவிடும். ஆகையால், வீணை இம்மாதிரி அனுப்பாதே" என்று தைரியமாய்க் கூறினள்.

வண்டிக்காரனும் அதை ஆமோதித்து, "சாமீ! பெரியம்மா சொல்றதுதாங்க சரி. நேத்தும்புடிச்சி நீராகாரங்கூட இல்லாமெ கெடக்கிற ஆத்மாவுக்கு மொதல்லே ஏதாச்சும் பாலு கீலு ஊத்துங்க. ஆச்சிபத்திரியிலே வர வர ரொம்ப கெட்டுப் பூடுசேங்க. ஏயெங்களுக்குக் கொஞ்சங்கூட சவுகரியமே இல்லீங்க. அல்லாத்துக்கும் பணக்காரங்களா பிடிக்குப்பிடி நமஷ்காரம் பண்ணிஞ ஏதோ சுமாரா பாக்கராங்க. இல்லாங்காட்டிபோஞ கொஞ்சங்கூட பாக்கரதே இல்லே. செத்தாக்கூட இனுமே ஆச்சுபத்ரிக்குப் போகக்கூடாதுன்னு ஏயெ ஜனங்க சொல்றதுங்க. அதோடே மாடு இனுமே ஒரு அடிகூட நடக்காதுங்க. இன்னிக்கு ஐயா வூட்டேதான் அதுக்குக் கூட ஆகாரம்போட்டு களெப்பாத்தணங்க. மொதல்லே அம்மாளெ எறக்குங்க" என்றான்.

அக்கம்பக்கத்திலுள்ள பல பேர்கள் இதையே ஆமோதித்துக் கூறியதால், முத்துச்சாமியால் அதற்கு மேலும் என்ன செய்ய முடியும்? கோபமும் வெறுப்பும் பொங்கியவாறு தங்கம்மாளைப் பலருடைய உதவியுடன் நடைத்திண்ணையில் கொண்டுவந்து விட்டான்.

முத்துச்சாமியின் மனது படும் வேதனையைக் கூறத் திறமில்லை. தான் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்துத் தனக்கு ஏதோ பெருஞ்சுமை வைத்துவிட்டதுபோன்ற சங்கடம் தோன்றியதேயன்றி, பெத்த தாயார் வந்திருப்பதாகவும் அவளுக்குள்ள ஆபத்தின் கொடுமையும் ஒன்றுமே தோன்றவில்லை. இந்தக் கிழவி இறந்துவிட்டால் பெரிய செலவு பிடித்துவிடுமே என்கிற பயம் முதலில் உண்டாகியது.

ஊர் ஒப்புக்காக கிழவியைத் திண்ணையில் கிடத்திச் சிறிது பாலை வாயில் வார்த்தான். இதற்குள் தங்கம்மாளின் பழைய சிநே

கிதைகளாகிய அக்கம்பக்கம் உள்ளவர்கள் அவர்களுக்குத் தெரிந்த கை மருந்துகளைப் போட்டுக் கட்டு கட்டினார்கள். கிழவிக்கென்னவோ பேசவே முடியவில்லை.

தான் ஆரம்பித்த நாடகம் பலிக்காது, வீட்டில் கிழவியும் அவளைச் சுற்றிக் கூட்டமும் கூடிவிட்டதைக் கண்டு சாவித்திரியின் மனது துடிக்கிறது. அவளும் முத்துச்சாமியும் ஒரு நிமிட நேரம் ஏதோ ரகஸ்யம் பேசி எதையோ முடிவுகட்டிக் கொண்டார்கள். சாவித்திரிக்கு மூச்சு ச்வாஸம் வாங்குவதுபோல் 'கர் கர்' என்று மூச்சை இழுத்துவிட வாரம்பித்தாள்.

இதைக்கண்ட குழந்தைகள், முத்துச்சாமி ஆகிய எல்லோரும் ஏக காலத்தில் பெருங் குரல் பாய்ச்சி, "ஐயையோ!" என்று அலற ஆரம்பித்தார்கள்.

முத்து வீதியில் ஓடிவந்து, "அப்பா! வண்டிக்காரா! என் சம்சாரத்தின் முடிவு சமீபித்துவிட்டது. இந்தச் சமயம் இக் கிழவி இங்கே இருந்தால் இந்த விசனத்திலேயே அவள் உயிரும் போய் விடும். அப்பா! நீ நல்லவனாயிருக்கிறாய். இதோ! இந்தா என்மோதிரத்தைக்கொண்டு விற்று நீ பணத்தை எடுத்துக்கொள்ளு. பக்கத்தில் உள்ள புஷ்பப் பேட்டையில் என் தங்கை இருக்கிறாள். அவளிடம் இந்தக் கடிதத்தையுங் கொடுத்து கிழவியையும் ஒப்புவித்துவிடு" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். வண்டிக்காரனும் மோதிரத்தின்விலை கட்டாயம் பத்து ரூபாயாவது இருக்கும் என்கிற மோகத்தில் மூழ்கியவனாய் அதற்கு ஒப்புக்கொண்டான். எனினும் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் மட்டும் இதை ஒப்புக்கொள்ளாமல், "அப்பா! முத்து! இந்த நிலைமையில் நீ இப்படி அனுப்பக்கூடாது. நடுவழியில் செத்துக்கிடந்தால் என்ன செய்வது? அவள் தலைவிதிப் படிக்கு ஆகட்டுமே! என்னவானாலும் பெத்த தாயா ரல்லவா! இந் நிலைமையில் அனுப்புவதற்கு உன் மனம் எப்படித்தான் இடங் கொடுக்கிறது?" என்று தங்கள் இயற்கைப் புராணத்தைக் கூற ஆரம்பித்தார்கள்.

இதைக் கேட்ட முத்துவுக்குத் தர்ம சங்கடமாகிவிட்டது. தாயாருக்கு உடம்பு அதிகமென்று கலபை செய்தால், வீட்டில்

வீண் கூட்டங் கூடி தண்ட செலவாகிவிடும் என்ற பயம் ஒருபுறம் வதைக்கிறது. "ஆமாம். என் மனைவி குடும்பத்தைச் சந்தியில்விட்டுச் சாகுந் தருணத்திலிருக்கையில் நான் எதைத்தான் கவனிப்பேன்? என்னைப்போல் இன்னொரு மகனும் மகளும் இருக்கையில் அங்கு அனுப்புவதில் என்ன குற்றம்? என் வீடு படும்பாடு உங்கள் கண்ணுக்குத் தெரியவில்லையா? நன்ருக பலத்துடன் உலக்கைபோல் உழைக்கும் காலத்தில் அந்தப் பெண்ணிடத்திலும் மகனிடத்திலும் காலத்தை யோட்டிவிட்டு, இந்தமாதிரி சாகும் சமயத்தில் இங்கு வந்து என் குடலை அறுத்தால் நான் என்ன செய்வேன்? யாருக்கென்று அழுவேன்?" என்று சற்றுக் கடுமையாகவே சொல்லி விட்டான்.

இதைக்கேட்ட ஒரு பெரியவர், "அப்பா! முத்து! நீ சொல்கிற வார்த்தையைக் கேட்டால் உன்னைப் பெற்ற தாயைவிட உன் மனைவிதான் பிரதானம் என்று நீ நினைப்பதுபோலல்லவா தோன்றுகிறது. நீ எத்தனை அக்கிரமங்கள் செய்து பணத்தைச் சம்பாதித்தபோதிலும் பெத்த தாயை இம்மாதிரி சமயத்தில் புறக்கணிக்கக்கூடாது. உலகத்தில் தாயைவிடத் தேய்வம் வேறு உண்டா! ஒரு மனிதன் முதலில் தொழவேண்டியது தன் தாயார்; பிறகு தான் கோவிலிலுள்ள தெய்வம். இது உனக்குத் தெரியாதா! மஹா பாரதத்தில் கர்ணனுக்கு எத்தனையோ ராஜ பதவியும், மற்ற சகல விதத்திலும் சௌகரியங்களும் இருந்தும் தன்னைப் பெற்ற தாயாரைக் காணுது அவன் உள்ளம் என்ன தவித்தது. பெத்த தாயைக் காண வேண்டுமென்று அவன் எவ்வளவு பதறினன். இரவு பகலாய் ஏங்கித் துடித்தான்.

முத்து! பெரியவர்கள் நமக்கு எதற்காக ராமாயணம், பாரதம், பாகவதம், பகவத்கீதை முதலிய இன்னும் பல அரிய பெரிய நூல்களெல்லாம் கொடுத்திருக்கிருர்கள்? அவைகளைப் படித்து அதன்படி கூடுமான வரையில் நடந்து நல்ல பயனை அடைவதற்காக வன்ருே? அதை அடியோடு மறந்துபோய் இப்படியா தாயாரைக் கேவலப்படுத்துவது?"

என்று அவர் கூறுவது முத்துவுக்கு ஒருபுறம் வெறுப்பும் ஒருபுறம் சற்று மன இளக்கமும் உண்டாக்கியது. எனினும் எந்தப்

பக்கமும் பதில் பேச முடியவில்லை. மீண்டும் மற்றொரு பாட்டியம்மா, "இதுதான் சமயம் இதை விடக்கூடாது" என்ற நோக்கத்துடன், "ஏண்டாப்பா! முத்து! எத்தனைதரம் வேண்டுமானாலும் ஒரு மனிதன் பெண்டாட்டியைப் புதிது புதிதாக மணக்கலாம். ஆனால், பெத்த தாயார் ஒருத்தி மறைந்துவிட்டால், மீண்டும் அந்த முன்னறி தெய்வத்தைக் கண்ணால் காணமுடியுமா? நீ எத்தனை தவம் செய்தாலும் அந்த ஒரு ஆத்மாவின் மறைவுக்குப் பிறகு தாயைக் காண சொப்பனத்திலும் ஆகாது. தெரியுமா! நீ இந்தச் சமயத்தில் அவளைச் சந்தியில் விட்டால் தெய்வத்துக்கும் ஒப்பாது. உன் மனைவி தன் தாயாரானால் இப்படி செய்வாளா?"

என்று சொல்லிக்கொண்டிருக்கையில், ஓடி ஒரு பட்டிக்காட்டு ஆள் அலையக்குலைய அங்கு வந்து முத்துச்சாமியை நோக்கி கோவெனக் கதறி யழுதான். ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. "என்னடா! என்ன சமாசாரம்? ஊரிலிருந்தா வருகிறாய்?" என்று முத்து கேட்பது, உள்ளே கபடநாடகம் நடிக்கும் சாவித்திரியின் காதில் கேட்டதும், அவள் நடிப்பு மாறிப்போய் இந்தக் கிழங்களின்மீது கோபமும், ஆள்வந்ததன் காரண மென்னவோ என்றறிய ஆவலும் திகிலும் உண்டாகிவிட்டன.

வந்த ஆள் பெரிதாக அழுதுகொண்டே, "சாமீ! பெரியம்மாளுக்குத் திடீரெனு காயலாவாகி ஆபத்தா இருக்குதுங்க. இனிமே தள்ளாதுண்ணு வயித்யகாரன் சொல்லிப்புட்டான். சேபகாரன் கட்டி வலிக்கிதுங்க. இன்னேரம் இருக்காங்களோ! செத்துட்டாங்களோ? அப்படி இருக்குதுங்க. ஒடனே ஒங்க அல்லாரையும் இட்டாரச் சொன்னாங்க."

என்று அவன் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் ஆணி அடித்ததுபோல் சாவித்திரியின் காதில் கேட்டதுதான் தாமதம், அவளை மீறிய துக்கமும் தாயாரிடத்தில் பாசமும் பொங்கிப் பீறிக்கொண்டு வந்துவிட்டது. "ஐயையோ! எமன் மாறுட்டமாய் வருவான் என்ற உண்மை இப்போதல்லவா தெரிகிறது! இந்தக் கிழவியைப் பிடிக்க வந்த எமன் என்னைப் பிடிக்க வந்தான்; என்னைப் பிடிக்க வந்த எமன் என் தாயாரைப் பிடித்துவிட்டானே! ஐயையோ! அதான்

எனக்குத் திடீரென்று ஜன்னி குதித்ததுபோல் தெளிவு உண்டாகிவிட்டது. என்ன செய்வேன்? அம்மா! அம்மா!" என்று ஒப்பாரியுடன் எழுந்து அலங்கோலமான வேஷத்துடன் வீதிக்கு ஓடி வந்தாள்.

இதைக் கண்டு எல்லோரும் பிரமித்துவிட்டார்கள். முத்துச்சாமிக்கே சற்றுத் திகைப்பும் ஆச்சரியமும் உண்டாகிவிட்டது. சாவித்திரி, "ஐயோ! வண்டிக்காரா! ஸ்டேஷன்வரைக்கும் வண்டி ஓட்டப்பா! பாட்டீ! கிழவியைப் பார்த்துக்கொள்ளுங்கள். எங்கம்மாவின் முகத்திலாவது விழித்துவிட்டு அவளை வாரிப் போட்டுவிட்டு வருகிறேன். உம். வண்டியில் ஏறுங்கள்" என்று முத்துவுக்கு உத்தரவிட்டாள்.

பக்கத்து வீட்டுப் பாட்டி சமயத்தைக் கைவிடாமல், "ஏண்டியம்மா! மாமியார் வந்திருக்கிறாள் என்றால் நோய் சாத்திக்கொண்டு நாடகம் நடித்தாய். இதெல்லாம் எனக்குத் தெரியாதா! இப்போ உன் தாயாருக்கு விபத்தென்றால், அதன் அருமை தெரிகிறதா! இதுதான் கபட உலகத்தின் கபட நாடகம் என்பது" என்று வெடுக்கெனக் கூறினாள்.

அப்போதுதான் சற்றுப் பேசுவதற்குத் தைரியங்கொண்ட தங்கம்மாள் திக்கி திக்கிப் பேசத் தொடங்கி, "அம்மா! சாவித்திரீ! அவன்தான் பெத்த தாயாரை அலக்ஷியம் செய்தாலும் நீயாவது உன் தாயாரை முதலில் போய்ப் பாரு. வணங்கு. அந்த ஆத்மாவைத் திருப்தி செய். என் விதியை நான் தொலைக்கிறேன்" என்று பரிதாபமாகக் கூறியதைக் கேட்ட பக்கத்திலிருந்த எல்லோருடைய மனமும் உருகிக் கண்ணீர் துளிர்த்தது. அடுத்த நிமிடமே முத்து உள்பட எல்லோரும் வண்டியில் செல்லும் ஓசை கேட்டது. தங்கம்மாளுக்குத் தெய்வந்தான் துணை.

# 13

கோபியின் கண்களில் தீப்பொறி பறக்கின்றதைப் பார்த்த மரகதத்திற்குப் பின்னும் குலை நடுக்க மெடுத்துக் கொண்டது. வாயைத் திறந்தால் என்ன வருமோ என்கிற பயத்துடன் பதுமைபோல் சென்றுளல்லவா! ஒரு பங்களா வாசலில் வண்டியை நிறுத்திவிட்டு, "அம்மா! நீ இங்கே இரு. இதோ வருகிறேன்" என்று கூறிவிட்டு உள்ளே சென்று 5 நிமிடத்தில் மீண்டும் திரும்பி வந்து, "உம். இறங்கிவா; வாயைத் திறக்கக் கூடாது. பத்திரம்!" என்று திட்டம் செய்து அழைத்துச் சென்றுன்.

அந்தப் பங்களா வெகு அழகாயும் சுத்தமாயும் எங்கு பார்த்தாலும் நவநாகரிக அலங்காரத்துடனும் காணப்பட்டது. பங்களாவைச் சுற்றியும் அதன் பின்புறமும் பெரிய தோட்டம் மைல் கணக்கான விஸ்தீரணத்துடன் காணப்பட்டது. ஒரு ஆள் இவர்களை அழைத்துச் சென்றுன்.

தோட்டத்தில் ஒரு பெரிய சதுரமான பாகத்தில் பலவிதமான ஜோடனைகள் காணப்பட்டன. குடிசை வீடுகள், சன்யாசி ஆச்ரமங்கள், பெரிய பங்களாவைப் போன்ற பாகங்கள் எல்லாம் மரகதத்திற்கு மிகவும் விசித்திரமாகத் தோன்றின. அவள் இமை கொட்டாது பார்த்துக்கொண்டு வந்தாள்.

கோபி, வேஷம்போடும் இடத்திற்கு மரகதத்தை அழைத்துச் சென்று காட்டினன். ஒரு ஆண்பிள்ளை நடிகைகளுக்கு முகத்திலும் கழுத்திலும் பவுடர்கள் தடவியவாறு கன்னு பின்னு வென்று பேசிச் சிரிக்கும் கண்றுவியைக் காட்டி, "அம்மா! சரியாகக் கவனித்துப் பாரு. உன் மகள் பார்வதிக்கும் ஸினிமாத் தொழிலின் முதல் அக்ஷராப்பியாஸம் இந்த அஸ்த ஸ்பரிசந்தான். தெரிந்ததா? பேசாமல் வா!" என்று மெல்ல அதட்டிக் கூறினன்.

இதைப் பார்த்ததும் மரகதத்திற்குத் தூக்கிவாரிப்போட்டது. "ஐயையோ! இதெல்லாம் எனக்குத் தெரியாதே! இதென்ன வேஷம்?" என்று தனக்குள் எண்ணித் துடித்தாள்.

நடிகர்களும் நடிகைகளும் — வேஷம் முடிந்தவர்கள்—ஒரு இடத்தில் ஒன்றுக உட்கார்ந்து கும்மாளமடிப்பதைக் கோபி தூர

விருந்தபடியே காட்டி, "உம். கிட்ட போனால் சம்பாஷணையை நிறுத்தி விடுவார்கள்; தூரவிருந்து கவனி. உன் சித்தாந்தத்தின் வண்டவாளம் வெளியாகும்" என்றான். கோபியின் ஒவ்வொரு வார்த்தையாகிய நெருப்புப் பொறியும், கண்ணால் காணும் காட்சியும் மரகதத்தின் வயித்தில் சித்திரவதை செய்கிறது.

ஒரு நடிகன் நடிகையைப் பார்த்து, "ஏய் பத்திரம்! இப்ப என்னமோ தூர நிற்கிறாய். இன்னிக்கு என்ன ஸீன் தெரியுமோன்னோ! நான்தான் உன்னைத் தூக்கிக்கொண்டு போகப்போகிறேன். நீ என் கையில் அகப்பட்டு விழிக்கணும்" என்கிறான். அதற்கு அந்த நடிகை "தே! பேசாமலிரு. அந்த ஸீனில்தான் என்னிடம் நீ சக்கையாய் உதை வாங்கி காறியுமியும் ப்ரஸாதத்தைப் பெற்றுக்கொண்டு திணறப் போகிறாயே! சமயம் பார்த்துச் சுடச்சுட ரெண்டடியும் விட்டுட்டா ஷூட்டிங் ஜம்மென்று நடந்துவிடுகிறது. தெரியுமா?" என்றாள். இன்னொருத்தியை நோக்கி, "கண்ணு! இன்னிக்கு நீ அழவேண்டிய பாகம். செத்தவர்களை எல்லாம் நினைப்பு மூட்டிக் கொள்ளு. இல்லாவிட்டால் கண்ணில் மிளகாய் தடவு" என்றான்.

வேறு நடிகன் சற்று ஏளனமாகப் பேசத்தொடங்கி, "அடேயப்பா! சுடச்சுட அடிக்க உனக்குத்தான் தெரியுமோ! டைரெக்டர் சொல்லிக் கொடுக்காத வசவுகள் ரெண்டு மூன்று அவன் உன்னைத் திட்டிவிட்டால், ஜனங்கள் சபாஷ் கொட்டி சிரிக்கமாட்டார்களோ! அது எங்கும் ஒலிக்குமல்லவா! அது கிடக்கட்டும். இப்போது ஜம்பம் பேசும் நீ யாரு தெரியுமா! கதையில் என்வீட்டு வேலைக்காரி நீ; ஞாபகமிருக்கட்டும். என்னுடைய அதிகாரத்தை எல்லாம் காட்டித் திட்டி விடுவேன். உன் மரியாதை அப்போது எங்கே?" என்றான்.

மற்றொரு நடிகன், "அடேய்! அன்று ஷூட்டிங்கில் என்னை அப்படியே தூக்கி எறிந்தாயே, இன்று உன்குடுமி என் கையில்தான் தெரியுமா! உன் காதலியையும் சேர்த்து அடித்து மூச்சுத் திணறச் செய்துவிடுகிறேன் இரு. உன்னை ஒரே குத்தில் குப்புறத் தள்ளி விடுகிறேன் பாரு"...என்பதற்குள்,

"அடேடேய்! இப்பவே சொல்லிவைக்கிறேன். அம்மாதிரி எல்லாம் எக்கச் செக்கம் செய்துவிடாதே! என் கால் கைகளை

முறித்துவிடாதே! இனிமேல் நான் அந்தமாதிரி செய்யமாட்டேன். பத்திரமப்பா" என்றான் அவன்.

இவைபோன்று இன்னும் எத்தனையோ வார்த்தைகளை அங்கு மீட்டிங்குபோல் கூடிப் பேசுகிறார்கள். பின்னும் சிலர் பேசுவதைக் காதால் கேட்கவே முடியாது. அத்தனை ஆபாஸமாய்ப் பேசுவதைக் கேட்கக் கேட்க கோபியின் மனம் கொழுந்துவிட்டு எரிகிறது.

"சினிமா உருப்படவில்லையென்றால் எப்படி உருப்படும்? நடிகர்கள் தங்களுக்குக் கொடுத்துள்ள பாகங்களை இடைவிடாமல் உருப்போட்டு அதே உணர்ச்சியுடன் இருந்து நடித்தால் நடிப்பில் ஸாரமிருக்கும். பார்க்கும் ஜனங்களுக்கும் உள்ளத்தில் உணர்ச்சி உண்டாகும்.

தம்மை மறந்து தமக்குக் கொடுத்த பாத்திரத்தில் ஐக்கியமாகி நடித்தாலன்றி நடிப்புக்குச் சோபிதமே இல்லை. இப்படி தமாஷும் பரிகாஸமும், பழி வாங்குதலும், கொஞ்சிக் குலாவுவதுமாக விருந்து பின்னர் ஸெட்டிங்குக்கு வந்தால், இதே கும்மாள உணர்ச்சி தோன்றுமா; நடிப்பின் ஸாரம் வருமா! அதனால்தான் படங்கள் குட்டிச்சுவராகின்றன" என்று கோபி தனக்குள் எண்ணியபடியே இந்த ஆபாஸத்தைக் காணமுடியாது எழுந்து வேறு இடத்தில் போய் உட்கார்ந்தான்.

"அம்மா! பார்த்தாயா! உன் பார்வதியின் திருவிளையாடலும் இதுதான். இன்னும் பாரு" என்றான். இதற்குள் ஷூட்டிங்கிற்கு யாவும் ஆயத்தமாயிற்று. முதலாளியின் கோஷ்டிகள் ஒருபுறம் உட்கார்ந்தார்கள். சூட்டும் வாயில் ஸிகரெட்டுமாக டைரெக்டர் வந்தார். அவருடைய இயற்கையான அட்டகாஸ த்வனியில் ஒரு கர்ஜனை செய்து நடிகர்களைக் கூப்பிட்டார்.

எல்லோரும் பெட்டிப் பாம்புபோல அங்கு வந்து நின்றார்கள். "எங்கே உனது பாடத்தைச் சொல்லு" என்று ஒரு நடிகையைப் பார்த்துக் கூறினர். அவள், தன் பாடத்தை நடிப்புடன் கூறினாள். அது ஒரு காதல் காக்ஷி. நடித்ததும் பேசியதும் சரியாயில்லாததால் டைரெக்டர், "அப்பப்பப்பப்ப! இந்தப் பாடத்தைப் பதினாயிரந்தரம் சொல்லிக் கொடுத்தும் உன் மூளையில் ஏறவில்லையே! சனியன், தலை

யெழுத்து...வலது கையினல் அவள் மோவாயைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு இயற்கையாக நின்று, "காதலா ! உன்னுடைய அமுதவாயின் முத்தம் இல்லாமல் நான் எப்படி உன் பிரிவைச் சகிப் பேன் !" என்று பணிவாய்ச் சொல்லித் தொலேயேன். இப்படி மோவாயைப் பிடித்துக்கொள்ளு. இப்படி நில்லு." என்று அந்த நடிகையைப் பிடித்துத் திருப்பியும் மோவாக்கட்டையைப் பிடித்துக் காட்டியும் கொஞ்சிக் கூறியும் நடிப்புச் சொல்லிக் கொடுத்தார்.

இதுபோல் இன்னும் இரண்டொரு ஷூட்டிங்கு நடப்பதற் குள் கோபியினல் அங்கு உட்கார முடியவில்லே. மரகதத்தினல் முதலே முடியாது தலே சுற்றலும் சங்கடமும் உண்டாகிவிட்ட தால், அவள் தவியாய்த் தவித்தாள்.

இதற்குள் முதலாளி அதே நடிகையைப் பார்த்து "ஏ புள்ளே ! பணங் கேக்ரபோது வாய் கூசாது ஆயிரத்தில் கேக்கருயே ! இந்த ரெண்டு வார்த்தையெ ஏன் அழகா சொல்லக்கூடாது? நல்லா சொல்லாட்டிப்போனு சம்பளங் கட்டைதான். தெரிஞ்சுக்கோ" என்று தன் அதிகாரத்தைக் காட்டினன்.

அதே சமயம் டைரெக்டர் ஆத்திரத்துடன், "தே ! இந்த தரம் சரியா சொல்லாவிட்டால், பளீரென்று அடிகொடுத்து விடு வேன்" என்று கையையும் ஓங்கிவிட்டார். அந்த நடிகையின் நிலேமை எப்படித்தானிருக்கும் ? கண்ணில் தண்ணி முட்டிவிட்டது. பேசமாட்டாது துக்கம் தொண்டையை அடைக்கிறது. "என்ன பரிதாபம் ! என்ன அடிமை வாழ்வு !"

என்று கோபி தனக்குள் இந்தக் கண்ருவியைக் கண்டு சகிக் காமல் "எழுந்து வா. போகலாம்." என்று கூறி மரகதத்தை அழைத் துக்கொண்டு வெளியே வந்தான். இதுபோல் விவரிக்க முடியாத கொடுமைகளும் ஆபாஸங்களும் சில கம்பெனிகளில் அனந்தம் இருக்கின்றன.

இவைகள் ஒன்றுமே தெரியாதிருந்த மரகதத்திற்கு இவை களேப் பார்த்த பிறகு "கோபி சொல்வதெல்லாம் உண்மை. நாம் அநியாயமாய் மோசம் போய்விட்டோமே" என்கிற வேதனையும் அபாரமான தவிப்பும் அவளேச் சுற்றிக்கொண்டன.

கோபி :—அம்மா ! போதுமா பரிசுத்தம்? குற்றமற்றத் தன்மைகளே எல்லாம் பார்த்தாய்விட்டதா ! இதே கதிதான் உன்

பார்வதிக்கும். புத்தியறிந்து வயதுவந்தப் பெண்களை இம்மாதிரி வழியில் விட்டுப் பணம் சம்பாதிப்பதும் ஒன்றுதான். அவர்களை அடிமைபோல் விற்றுப் பணம் சம்பாதிப்பதும் ஒன்றுதான். சினிமாவில் ஆடுவதற்கும், சேருவதற்கும் ஒரு எல்லை இருக்கவேண்டும். தங்களது குடும்பத்துடன் அப்படியே நடித்தால்—தம்பதிகளை தம்பதிகளாக நடித்தால்—ஒருவாறு ஒப்புக்கொள்ளலாம். கண்டவர்களுடன் நடிப்பதில் பரிசுத்தம் வேறெயா !

அம்மா! கள்ளுக்கடைக்காரன் எப்படி பிறர் குடியைக் கெடுத்துத் தான் ஒரு ட்ராம் கூடக் குடிக்க மாட்டானோ அப்படியே ஒரு சிலரைத் தவிர மற்ற பட முதலாளிகள் ஊர்பெண்களை வேட்டையாடுவதிலேயே மோகங்கொண்டிருப்பார்களேயன்றித் தம் மகளேயோ, தம் மனைவியையோ இம்மாதிரி பிறருடன் பகிரங்கமாக நடிக்க விடுவார்களா !

எங்கேயோ ஒருவர் இருவர் நடிக்கச் செய்வதாகத் தெரிகிறது. அதில் இம்மாதிரி ஊழல்கள் இருக்காதென்றே நினைக்கிறேன். சில பட முதலாளிகள் தாம் கண் வைத்துள்ள பெண்களை முதல் படத்தில் நடித்த பிறகு நடிப்பதற்கே விடுவதில்லை. சிலர் விட்டாலும் அன்னியனுடன் தொட்டு நடிக்க விடுவதில்லை. தானும் ஒரு அன்னியன்தானே என்கிற உணர்ச்சி மறந்து விடுகிறது.

இந் நிலைமையில் தினே தினே பாழுங் குழியில் விழுந்துவரும் சினிமாவை உன்னைப்போன்ற மூடங்கள்தான் கவனிக்கவில்லை. இரு ; இரு. இன்னும் சில நடிகைகளின் வாயிலாகவே உனக்கு விளக்குகிறேன். இனி, முகம் சவம்போலாகி பிரயோஜனம் என்ன ?...ட்ரைவர் ! சினிமா நடிகை கலாவதியின் வீட்டிற்குப் போ !" என்று அதிகாரத்துடன் கூறினன்.

"ஐயோ ! அங்கென்ன புதைபாணம் கிளம்புமோ தெரியவில்லையே ! என்ன செய்வேன் ? அல்ப பணத்திற்கு ஆசைப்பட்டுப் பெரிய விபத்தில் மாட்டிக்கொண்டோமே !...இவன் இப்படியே நம்மை இழுத்துக்கொண்டு போய்க் கொண்டிருந்தால், அங்கு குழந்தைக்கு என்ன ஆபத்தோ தெரியவில்லையே ! அதைச் சொல்லவும் பயமாயிருக்கிறதே !" என்று மரகதம் தனக்குள் எண்ணித் தவித்தாள்.

சில மணி நேரங்கள் வண்டி சென்று ஒரு சிறிய பங்களாவின் வாசலில் நின்றது. கோபி முதலில் இறங்கி, "அம்மா இருக்கிறார்களா?" என்று வேலைக்காரியைக் கேட்டான். உள்ளே இருப்பதாய் அவள் தெரிவித்ததும், கோபி தன் தாயாருடன் உள்ளே சென்றான்.

சினிமா நடிகையான கலாவதி ஒரு பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தாள். கோபி, அவளுக்கு மரியாதையாக வந்தனம் செய்துவிட்டு, உங்கள் வேலைக்குத் தடையாய் வந்ததற்கு மன்னிக்க வேண்டும். உங்களிடம் சில விஷயங்களைப்பற்றிப் பேசுவதற்காக வந்தேன். சினிமாவில் தாங்கள் நடித்து அனுபவமிருப்பதால் அது விஷயமாக உங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள ஆவல் படுகிறேன். இந்தம்மாளும் நானும் நடிக்கலாமென்று ஆசை. நாங்கள் குடும்பத்திலிருப்பவர்கள். ஆகையால், கேட்க வந்தேன்" என்று மெல்ல மூட்டையை அவிழ்த்தான்.

கலா:—அப்படியா! என்னிடத்தில் நீங்கள் என்ன சமாசாரத்தை எதிர்பார்க்கிறீர்கள்? ஸினிமா முதலாளிகளிடத்திலும், அதைச் சார்ந்த மற்ற தொழிலாளிகளிடத்திலும் எப்படிப் பழக வேண்டுமென்று அறிய விரும்புகிறீர்களா? அல்லது உண்மையை அறிய விரும்புகிறீர்களா?

கோபி:—அம்மணீ! நாங்கள் முன்பின் அறியாதவர்களாகையினால் அதன் உண்மையை அறிவதற்கே ஆவலாயிருக்கிறோம். மேலும் நீங்கள் குடும்பத்திலிருந்து சேர்ந்த நடிகையானதால் உங்களைக் கேட்டால் விவரம் தெரியுமென்று வந்தோம்.

கலா:—ஐயா! த்ரிசங்கு சுவர்க்கம் என்று ஒன்றிருப்பதைப் படித்து அறிகின்றோம். இப்போது என்வாழ்க்கை ஒரு த்ரிசங்கு சுவர்க்கமாய் இருக்கிறது. "கானல் நீரைக் கண்டோடிய மானைப் போல்" என்ற பழமொழி எனது வாழ்க்கையில் உண்மையாகி விட்டது. ஏதோ ஒரு சில கம்பெனிகளைத்தவிர மற்ற கம்பெனிகளில் தற்போது இருக்கும் நிலைமையில் குடும்ப ஸ்திரீகள் ஸினிமாவில் கால் வைப்பதற்கே யோக்கியதையில்லை என்பதே என்னுடைய அனுபவ அபிப்பிராயம். என்னுடைய சங்கீதத்திற்கும், ஏதோ கடவுளால் கொடுக்கப்பட்ட சிறு அழகிற்கும் நானும் என் தாயாரும் கர்வப் பட்டோம். அந்தக் கர்வத்தை அடக்கும்பொருட்டே ஈசன் வழி தேடினான் என்று இப்போது தோன்றுகின்றது.

ஒரு பட முதலாளி எங்களைச் சந்தித்து என்னை யானையாக்குவதாயும், குதிரையாக்குவதாயும் வெகு நாணயத்துடன் தடபுடலாகப் பேசி, முதல் படத்திற்கே பத்தாயிரம் கொடுப்பதாக ஒப்பந்தம் பண்ணிக்கொண்டு, ஆயிரம் ரூபாய் அட்வான்ஸாகவும் கொடுத்தான். துன்பம் வரும் பின்னே மனத்துணிவு வரும் முன்னே என்றபடி எனக்கும் என் தாயாருக்கும் உற்றார் உறவினர் என்ற உணர்ச்சியே யற்று, ஒரு புதிய தைரியம் பிறந்துவிட்டது. ஒருவருக்கும் சொல்லாமல் நடிக்கச் சென்றுவிட்டோம். ஆழம் அறியாமல் சேற்றில் காலை வைத்துக்கொண்டது போல, என் கதியும் முடிந்தது. நாளடைவில் முதலாளி காட்டிய அன்பும் உபசாரமும் அவன் நடந்துகொண்ட மாதிரியும் என்னைப் படத்திற்கு மாத்திரம் அடிமையாக்கவில்லை, தனக்கும் சேர்த்து அடிமையாக்கிக்கொண்டான் என்பது தெரிந்ததும் நான் விழித்துக் கொண்டேன்.

இதற்குமுன் நாலைந்து குழந்தைகளுக்குச் சங்கீதம் சொல்லிக் கொடுத்து முப்பது ரூபாய் சம்பளம் கண்ணியமாகப் பெற்று என் தாயாரும் நானும் மானமாகப் பிழைத்ததன் மேன்மை இந்தச் சீர்கேடான நிலைமைக்கு வந்தபோதுதான் நன்கு தெரிய வந்தது. முதலாளியின் எண்ணத்திற்கு முற்றிலும் விரோதமாக நான் நடந்து கொண்டதால், என்மீது அந்த மகானுபாவனுக்குக் கொடிய க்ஷாத்திரமும் வெறுப்பும் ஏற்பட்டுவிட்டன. என்னை அடியோடு மட்டம் தட்டிவிடவேண்டும் என்ற நோக்கமும் உறுதியாய் உண்டாகி விட்டது. நான் அடியோடு தலையெடுக்க விடாதபடியும், இனி வேறு படத்தில் நான் நடிக்காதபடியும் என்னுடைய பாட்டு, நடிப்பு முதலியவற்றையும் கெடுத்துக் குட்டிச்சுவரடித்துவிட்டான். இங்ஙனம் செய்வதாகக் கூறி என்னைப் பயமுறுத்திப் பார்த்தான். என்னைச் சீர்குலைப்பதற்காக உன்னதமான கதையையும் சீர் குலைத்தான். ஒலிப்பதிவு செய்பவன், ஒளிப்பதிவாளன் முதலிய சகலரிடமும் கூறி என் முகத்தைக் கெடுத்துக் குரங்கு போலும், பூதம் போலும் எத்தனை குரூபியாகச் செய்ய முடியுமோ அத்தனை கோரமாக உருவத்தைச் செய்து, குரலை அசல் பிசாசு, கழுதை, நாய், நரி முதலியவைகளைப்போல் விகாரப்படுத்திக் கரேலென்ற பயங்கரத்தையுடைய ஒரு உருவமாக்கிப் படத்தை முடித்தான்.

இத்தனை அவகேடும் படம் வந்த பிறகுதான் எனக்குத் தெரிய வந்தது. நான் நன்றாக நடிக்காததால் படம் பாழாகி தனக்கு

நஷ்டம் உண்டாகி விட்டதால், முழுத் தொகையைக் கொடுக்க முடியாதென்று அதிலும் மண்ணைப் போட்டு விட்டான்.

அடாடா! நான் நினைத்தது ஒன்று. நடந்தது ஒன்றாக முடிந்தது. எப்படியாவது தொலையட்டும். நான் மானத்துடன் வெளியே வந்துவிட்டால் போதும் என்று எனக்குத் தோன்றிவிட்டதால், நான் திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல் பேசாமல் வந்துவிட்டேன். என் பெயர் இரண்டாம்பெயர் அறியாதிருந்தது சந்தியில் சிரிக்கலாயிற்று. எங்கள் பந்துக்களும் என்னை வெறுத்தார்கள். நான் பழையபடி பாட்டுச் சொல்லிக் கொடுக்கும் இடத்திலும் என்னை ஸினிமாக்காரி என்கிற கவசம் சூழ்ந்துவிட்டதால், அவர்களும் பயந்து நிறுத்திவிட்டார்கள்.

பிறகு யாராவது சினிமாவுக்குக் கூப்பிட வந்தாலே பயந்து நடுங்கி வெறுத்து அதை விஷம்போல் தள்ளிவந்தேன். முதலாளிகளும் மற்ற தொழிலாளிகளும் விகல்பமற்ற மனத்துடன் மரியாதையாக நடத்தி ஒழுங்காக படமெடுக்கும் கம்பெனிகள் எங்கோ சில தான் இருக்கின்றன என்றதையும் பிறகுதான் அறிந்தேன். அல்ப ஆசையின் பலனால் என் பிழைப்பே திரிசங்கு சொர்க்கமாகியதுதான் பலன் கண்டேன்.

நடிகைகளைத் தம் சொந்த மக்கள்போல் பாவித்து மரியாதை கொடுத்து ஆதரிக்கும் கம்பெனியைப் பகவான் காட்டினார். அந்தக் கம்பெனியில் "விதவை" என்ற படத்தில் நான் நடித்த பிறகு தான் எனக்கு நல்ல நடிகை என்கிற பெயர் வந்தது. என்னுடைய அழிந்துவிட்ட வாழ்வுக்கு ஒரு சிறிது வெளிச்சமும் உண்டாக வாரம்பித்தது. கண்ட கம்பெனியிலும் நான் கால்வைக்கவும் மாட்டேன். வைக்கத் துணிபவர்களையும் நான் மறியல் செய்தாவது நிறுத்தி விடுவேன். இதுதான் என் அபிப்பிராயம்" என்று நீண்ட பிரசங்கம்போல் கூறினாள்.

கோபி :—அம்மணீ! நீங்கள் முதலில் நடிக்க ஒப்புக்கொண்ட கம்பெனியின் பெயர் எதுவோ?

கலா :—ஐயோ! அதன் பெயரழகைக் கேளுங்கள். தடபுடல் டாக்கீஸ் கம்பெனி, என்று கூறுவதைக் கேட்டதும் கோபியையும், மரகதத்தையும் தூக்கி வாரிப்போட்டது. "ஹா!...தடபுடல் டாக்கி கம்பெனியா?" என்று கோபி தனக்குள் அலறினான். மரகதத்திற்கு அப்படியே தலையைச் சுற்றி மயக்கம் போட்டுவிடும் போலாகிவிட்டது. அவளது சப்தநாடியும் அடங்கிவிட்டதென்றால், மிகையாகாது.

183034

# நமது விளம்பர விகிதம்

ஒரு பக்கத்துக்கு ஒரு முறை ரூ. 12 0 0 கால் பக்கத்துக்கு ,, ரூ. 4 0 0
அரை பக்கத்துக்கு ,, ,, 6 8 0 உள் அட்டைக்கு ,, ,, 15 0 0

நீண்ட கால விளம்பரங்களுக்குத் தனிச் சலுகை காட்டப்படும்.

| | | |
|---|---|---|
| 16-வது ஆண்டு<br>ஆரம்பம்<br>ஜனவரி 1939 | **ஜகன்மோகினி**<br>ஆசிரியை:<br>வை. மு. கோதைநாயகி அம்மாள் | வருஷ சந்தா<br>ரூ. 1—8<br>தனிப் பிரதி<br>அணா 2 |

ஆங்கில மாதம் முதல்தேதி வெளிவரும்

தொடர்நாவல் பத்திரிகை

இந்த ஆண்டின் முதல் 5 இதழ்களில் "கஸ்தூரி திலகம்" அல்லது "கானும்ருதம்" முடிந்து 6-வது இதழ் முதல் "கானல் நீர் அல்லது கபட உலகம்" என்னும் நாவல் வருகிறது. இப்பொழுது சந்தா அனுப்புபவர்களையும் ஜனவரி முதல் சேர்த்துக்கொண்டு முதல் இதழிலிருந்து அனுப்புகிறோம்.

## வை. மு. கோதைநாயகி அம்மாள், எழுதிய நாவல்கள்.

**ரூ. 2-8**

வைதேகி
ராதாமணி
சாருலோசனு
பத்மசுந்தரன்
காதலின் கனி

**ரூ. 2**

நவநீதகிருஷ்ணன்
ருக்மிணீகாந்தன்
சாமளநாதன்
தியாகக்கொடி
மங்களபாரதி

**ரூ. 1-12**

சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி

**ரூ. 1-8**

சோதனையின் கொடுமை

**ரூ. 1-4**

பரிமளகேசவன்
உத்தமசீலன்
இன்பஜோதி
ராஜமோஹன்
அனாதைப்பெண்
வாழ்க்கையின்நாதம்
ஜீவியச்சுழல்
கஸ்தூரி திலகம்

**ரூ. 1**

சுகந்தபுஷ்பம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திரமண்டலம்

**அணா 14**

கோபாலரத்னம்
புத்தியே புதையல்

**அணா 12**

கதம்பமாலை

**அணா 10**

பட்டமோ பட்டம்
மகிழ்ச்சி உதயம்

**அணா 8**

நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின் பரிபவம்
பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தஸாகர்
ப்ரேமப்ரபா
வத்ஸகுமார்
மாலதி

**அணா 6**

பக்ஷமாலிகா

**அணா 4**

ஜெயஸஞ்சீவி
சுகுணபூஷணம்
அம்ருததாரா
அன்பின்சிகரம்
ஸரஸராஜன்
உளுத்த இதயம்

"ஜகன்மோகினி" ஆபீஸ், திருவல்லிக்கேணி.

"JAGANMOHINI" Vol. XVI No. 7 Regd. No. M. 2210




தலைவலிக்கு




ஆஸ்பிரினை விலக்குங்கள்
இருதயக் கோளாறுகளையும்
விலக்குங்கள்

அம்ருதாஞ்சனை
உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது.

அம்ருதாஞ்சன் லிமிடெட்.,

சென்னை கல்கத்தா பம்பாய்


Printed & Published by V. M. Parthasarathy
at "Jaganmohini" Press, 26, Car St, Triplicane, Madras.